# 2014

# வருடாந்த அறிக்கை

EDB

## இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபை

10-05-2016

மாண்புமிகு மலீக் சமரவிக்கிரம
அபிவிருத்தி உபாயங்கள் மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சர்,
அபிவிருத்தி உபாயங்கள் மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சு,
6 ஆம், மேற்கு கட்டடம்,
உலக வர்த்தக மையம்,
கொழும்பு 01.

மாண்புமிகு ஐயா,

**ஆண்டறிக்கையும் கணக்குகளின் கூற்றுக்களும் - 2014**

1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் பிரிவு 13 (2) இன் பிரகாரம் இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபையின் 2014 ஆம் ஆண்டுக்கான ஆண்டறிக்கையினை பின்வரும் ஆவணங்களுடன் இணைத்து, பணிப்பாளர் சபையின் சார்பில் சமர்ப்பிப்பதில் நான் மகிழ்ச்சியடைகிறேன்.

- தலைவியின் அறிக்கை
- கணக்குகளின் கூற்று
- கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை

உண்மையுள்ள,

இந்திரா மல்வத்த
தலைவியும் பிரதான நிறைவேற்று அதிகாரியும்
**இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபை**

# சிரேஷ்ட முகாமைத்துவப் பணிப்பாளர்கள் - 2014

| | | |
|---|---|---|
| தலைவர் மற்றும் பிரதான நிறைவேற்றுனர் | - | திரு. பந்துல எகொடகே |
| பணிப்பாளர் நாயகம் | - | திருமதி. டப்ளியு.எம்.டீ.எஸ். வீரகோன் |
| நிறைவேற்றுப் பணிப்பாளர் | - | கலாநிதி யூசுப் கே மரிக்கார் |
| நிதி மற்றும் நிர்வாகப் பிரிவு | - | செல்வி. ஆர்.எம்.பீ. ஹேவாலியனகே<br>(மேலதிக பணிப்பாளர் நாயகம்) |
| நிதிப் பிரிவு | - | திருமதி. பீ.கே. சுமித்ராரச்சி (பணிப்பாளர்) |
| மனித வளங்களின் அபிவிருத்திப் பிரிவு | - | திருமதி. ஏ.ஜி.சி. கிரியல்ல (பணிப்பாளர்) |
| வர்த்தக வசதியளிபும் வர்த்தக தகவல் பிரிவும் | - | திரு. எஸ்.ஆர்.பீ. இந்திரகீர்த்தி (பணிப்பாளர்) |
| தகவல் தொழில்நுட்பப் பிரிவு | - | திருமதி. பீ.வீ.ஏ.எம். பத்தேகமகே (பணிப்பாளர்) |
| ஏற்றுமதிச் சந்தைப்படுத்தல் அபிவிருத்திப் பிரிவு | - | திருமதி. ஜே. சிறிவர்த்தன<br>(மேலதிக பணிப்பாளர் நாயகம்) |
| ஏற்றுமதி விவசாயப் பிரிவு | - | கலாநிதி (திருமதி.) எம்.எல்.ஏ. சமராப்புலி (பணிப்பாளர்) |
| பிராந்திய அபிவிருத்திப் பிரிவு | - | திரு. கே.எச்.ஆர்.பீ. பெர்நாந்து (பதில் பணிப்பாளர்) |
| கொள்கை மற்றும் உபாயத் திட்டமிடல் பிரிவு | - | திருமதி. யு.கே.டி. வகாபிட்டிய (பணிப்பாளர்) |
| கைத்தொழில் உற்பத்திப் பொருட்களின் பிரிவு | - | செல்வி சீ. திஸாநாயக (பணிப்பாளர்) |
| ஏற்றுமதிச் சேவைகளின் பிரிவு | - | திரு. எம்.கே.எஸ்.கே. மல்தெனி (பணிப்பாளர்) |
| விசேட கருத்திட்டங்கள் பிரிவு | - | திரு. டி. ஜயவர்த்தன (பணிப்பாளர்) |
| சந்தைப்படுத்தல் அபிவிருத்திப் பிரிவு | -<br>- | திருமதி. ஐ.சீ. அழகப்பெரும (பதில் பணிப்பாளர்) |
| உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு | - | திருமதி. என்.பீ. என்டகம<br>(பதில் உள்ளகக் கணக்காய்வாளர்) |
| சட்டப் பிரிவு | - | திருமதி. டி.ரி. விஜேயரத்ன (சட்ட அலுவலர்) |
| கணக்காய்வாளர் | - | கணக்காய்வாளர் நாயகம் |
| வங்கியாளர்கள் | - | இலங்கை வங்கி<br>சும்பத் வங்கி<br>தேசிய அபிவிருத்தி வங்கி |

**<u>பதியப்பட்ட அலுவலகம்</u>**
இலக்கம் 42, நவம் மாவத்தை,
கொழும்பு 02.

## இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபை
## பணிப்பாளர்களின் சபை - 2014

| | | | |
|---|---|---|---|
| 01. | திரு. பந்துல எகொடகே | - | தலைவர் |
| 02. | கலாநிதி. யூசுப் கே மரிக்கார் | - | பணிப்பாளர் |
| 03. | திரு. நவாஸ் ரஜாப்டீன் | - | பணிப்பாளர் |
| 04. | திரு. சரப் எம் சுகைப் | - | பணிப்பாளர் |
| 05. | திரு. ரொஹன்த என்.ஏ. அத்துகோரல | - | பணிப்பாளர் |
| 06. | கலாநிதி. சீ.சீ. அபேவர்தன | - | பணிப்பாளர் |
| 07. | திரு. எஸ். அலாம்டீன் | - | பணிப்பாளர் |
| 08. | திரு. ஏ.கே. செனெவிரத்ன | - | மேலதிகச் செயலாளர்<br>கைத்தொழில் மற்றும் வணிக அமைச்சு |
| 09. | திரு. அனுராதா விஜேகோன் | - | மேலதிகச் செயலாளர்<br>துறைமுகங்கள் மற்றும் விமான சேவைகள் அமைச்சு |
| 10. | திரு. அசோக சிறிவர்தன | - | மேலதிகச் செயலாளர்<br>விவசாய அமைச்சு |
| 11. | திரு. யு.கே.எஸ். மிகிந்துகுலசூரிய | - | மேலதிகச் செயலாளர்<br>பெருந்தோட்டக் கைத்தொழில்கள் அமைச்சு<br>(2014 மே மாதம் வரை) |
| 12. | கலாநிதி. (திருமதி.) ஏ. தமிதா என்.டீ சொய்சா | - | செயலாளர்<br>பெருந்தோட்டக் கைத்தொழில்கள் அமைச்சு<br>(2014 மே மாதம் வரை) |
| 13. | கலாநிதி. டி.எம்.ஆர். திஸாநாயக | - | செயலாளர்<br>கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் அமைச்சு<br>(2014 மே மாதம் வரை) |
| 14. | திரு. கே.எம்.எம் சிறிவர்தன | - | பணிப்பாளர் நாயகம்<br>அரசிறைக் கொள்கைகள் திணைக்களம்<br>நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சு |
| 15. | திரு. வீ. சிவஞானசோதி | - | செயலாளர்<br>மரபுமுறைக் கைத்தொழிகள் மற்றும் சிறிய தொழில்முயற்சிகள் அமைச்சு |
| 16. | திரு. ஜீ.கே.டி. அமரவர்தன | - | செயலாளர்<br>கூட்டுறவு மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சு |
| 17. | திரு. சஞ்சீவ விக்கரமநாயகா | - | சபை அங்கத்தவர்<br>இலங்கை முதலீட்டுச் சபை |

# உள்ளடக்கம்


| | | |
|---|---|---|
| 1. | அறிமுகம் | 57 |
| 2. | 2014 ஆம் ஆண்டு காலப் பகுதியில் ஏற்றுமதிச் செயலாற்றுகை | 58-73 |
| 3. | 2014.12.31 ஐந் தொகை | 74 |
| 4. | 2014.12.31 வருமானம் மற்றும் செலவினக் கூற்றுக்கள் | 75 |
| 5. | காசுப் பாய்ச்சல் அறிக்கை | 76 |
| 6. | உரிமையாண்மை மாற்றங்களின் அறிக்கை | 77 |
| 7. | நிதி அறிக்கைக் குறிப்புக்கள் | 78-85 |
| 8. | கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை | 86-113 |

## இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபை

## தொலை நோக்கு

இனங்காணப்பட்ட பிரதான உற்பத்திப் பொருட்கள் துறைகளுக்கான உலகளாவிய மூலங்களுக்கான அமைவிடங்களின் பின்னர் பிரதான வழங்குனராக இலங்கையை மாற்றுதல்.

### பணிக்கூற்று

உற்பத்திப் பொருட்கள் மற்றும் சேவைகளின் ஏற்றுமதி அபிவிருத்தி மற்றும் மேம்பாட்டிற்கான பிரதான அரச நிறுவனமாக இலங்கை ஏற்றுமதி அபிவிருத்தி சபையை மாற்றுதல், இலங்கையின் ஏற்றுமதிப் பொருட்களின் சா்வதேச போட்டித் தன்மையினை அதிகரித்தல், பொருட்கள் மற்றும் சேவைகளின் ஏற்றுமதியின் மூலம் கிடைக்கப் பெறும் அந்நியச் செலாவணியினை உச்சப்படுத்துதல், மற்றும் தேசிய பொருளாதார இலக்குகளை அடைவதற்கு பங்களிப்புச் செலுத்துதல்.

### ஏற்றுமதி அபிவிருத்திச் சபையின் குறிக்கோள்கள்

01. அரசாங்கத்தின் தொலை நோக்கிற்கு ஏற்ப, இலங்கையின் உற்பத்திப் பொருட்களினதும் மற்றும் சேவைகளினதும் ஏற்றுமதிப் பெறுமதியை அதிகரிக்கச் செய்தல்

02. ஐரோப்பிய சங்கம் மற்றும் ஐக்கிய அமெரிக்க சந்தைகளில் இலங்கையின் ஏற்றுமதிப் பொருட்களுக்கான சந்தை வாய்ப்புக்களை ஒன்று திரட்டும் அதே வேளை, ஐரோப்பிய சங்கம் மற்றும் ஐக்கிய அமெரிக்கா தவிர்ந்த ஏனைய வெளிநாட்டுச் சந்தைகளுக்கான ஏற்றுமதிகளை, 2020 ஆம் ஆண்டளவில் 50 சதவீதத்தினால் அதிகரித்தல்.

03. இலங்கையின் மொத்த ஏற்றுமதி வருமானத்திற்கு ஏறத்தாழ 80 சதவீத பங்களிப்பைச் செலுத்தும் இனங்காணப்பட்டுள்ள பிரதான ஏழு (07) உற்பத்தித் துறைகளில் விசேட கவனம் செலுத்தலும், அத்துறைகளில் குறிப்பிடத்தக்க வளா்ச்சியை அடைதலும்.

04. தெரிவு செய்யப்பட்ட சந்தைகளில் ஒன்றிணைக்கப்பட்ட சந்தைப்படுத்தல் தொடா்பாடல் நிகழ்ச்சித் திட்டங்களை நடாத்துவதன் ஊடாக, இலங்கையின் ஏற்றுமதிப் பொருட்கள் மற்றும் சேவைகள் தொடா்பாக மிகச் சாதகமான சிறந்த மனப்பான்மையினை சா்வதேச ரீதியில் ஏற்படுத்துதல்

05. சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில் முயற்சிகள் உட்பட ஏற்றுமதி வா்த்தகத்தின் நன்மைகளை, அத்துறையில் ஈடுபட்டுள்ள அனைத்துத் தரப்பினருக்கும் நாட்டின் சகல பிரதேசங்களுக்கும் கிடைப்பதற்கு வழியமைத்தல்.

06. இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபையின் ஊழியா்களின் உற்பத்தித் திறன் மற்றும் அா்ப்பணிப்பு என்பன தொடா்பில் விசேட கவனம் செலுத்தி, இலங்கையின் ஏற்றுமதி அபிவிருத்திச் சபையின் முக்கிய விழுமியங்களை அடிப்படையாகக் கொண்டு செயற்படக் கூடிய விசேட திறமை வாய்ந்த குழுவொன்றினை உருவாக்குதல்.

**இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபை**

**இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபையின் 2014 ஆம் ஆண்டிற்கான செயலாற்றுகை**

**அறிமுகம்**

விசேடமாக இலங்கையின் ஏற்றுமதி உற்பத்திப் பொருட்களினதும் சேவைகளினதும் அபிவிருத்தி மற்றும் மேம்பாட்டு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான பொறுப்பு ஒப்படைக்கப்பட்டுள்ள இலங்கையின் தேசிய வர்த்தக மேம்பாட்டு நிறுவனமான இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபை 40 ஆம் இலக்க இலங்கை ஏற்றுமதிச் சட்டத்தின் கீழ் 1979 ஆம் ஆண்டு ஸ்தாபிக்கப்பட்டது.

ஏற்றுமதியானது, மொத்த உள்நாட்டு உற்பத்தியில் கிட்டத்தட்ட 20 சதவீதத்துக்குப் பங்களிப்புச் செலுத்துவதனால், ஏற்றுமதித் துறையானது அபிவிருத்தி செய்வதற்கான முன்னுரிமை பெற்ற ஒரு துறையாக இனங்காணப்பட்டுள்ளது. அரசாங்கத்தின் அபிவிருத்தி நிகழ்ச்சி நிரலுக்கு ஏற்ப, இனங்காணப்பட்ட பிரதான உற்பத்திப் பொருட்கள் துறைகளுக்கான உலகளாவிய மூலங்களுக்கான அமைவிடங்களின் பின்னர் பிரதான வழங்குனராக இலங்கையை மாற்றும் நோக்குடன் சர்வதேச கொள்வனவாளர்கள் மற்றும் சர்வதேச சந்தைகளில் உற்பத்திப் பொருட்களையும், சேவைகளையும் மேம்படுத்தும் நோக்கத்துடன் செயற்பட்டு வருகின்றது. இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபை தனது பிரதான தொழிற்பாடுகளை, கொள்கை ஆலோசகர், கண்காணிப்பாளர், மேம்பாட்டாளர் வசதியளிப்பவர் மற்றும் அறிவை வழங்குபவர் என ஐந்து இனங்காணப்பட்ட பங்குகளை மேற்கொண்டு வருகின்றது.

இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபை ஏற்றுமதித் துறையின் அபிவிருத்தி நோக்கங்களை அடையும் நோக்குடன் தொடர்புடைய சகல பொது மக்கள் மற்றும் பங்கேற்பாளர்களின் ஒருங்கிணைப்புடன் தேசிய ஏற்றுமதி அபிவிருத்தித் திட்டத்தினை வகுப்பதோடு, நடைமுறைப்படுத்தியும் வருகின்றது. இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபையின் அணுகு முறையானது, அரச துறையானது உபாயச் செயன்முறைக்கான வசதியளிப்பினை மேற்கொள்கின்றது என்பதனையும், ஆனால், ஏற்றுமதியாளர்களே தமது உபாயங்களை மேற்கொள்ள வேண்டும் என்ற கோட்பாட்டினை அடிப்படையாகக் கொண்டு அமைந்துள்ளது.

**இலங்கையின் ஏற்றுமதித் துறை**

**ஏற்றுமதிச் செயலாற்றத்தின் மேனோக்கு**

2013 ஆம் ஆண்டின் தொடர்புடைய காலப்பகுதியில் பதிவு செய்யப்பட்டிருந்த ஐஅடொ 11,113 மில்லியன் பெறுமதியான இலங்கையின் ஏற்றுமதி வருவாயானது, 2014 ஆம் ஆண்டில் ஐஅடொ 11,878 மில்லியன்களாக 6.88 சதவீதத்தினால் அதிகரித்துள்ளது. இச்சாதகமான செயலாற்றுகையானது 2014 ஆம் ஆண்டில் தொடர்ந்து காணப்பட்டது.




மூலம்: இலங்கைச் சுங்கத் திணைக்களம்

இலங்கையின் ஏற்றுமதி வருவாயானது, 2014 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதல் டிசம்பர் மாதம் வரையிலான காலப்பகுதியில் ஐஅடொ 11.8 பில்லியன்களைப் பதிவு செய்தது.

2014 ஆம் ஆண்டில், நாட்டின் மொத்த வர்த்தக ஏற்றுமதி வருவாயில் முறையே 22.72 சதவீதம், 2.23 சதவீதம் மற்றும் 67.92 எனும் சதவீதங்களில் பங்களிபபுச் செலுத்திய மூன்று பிரதான துறைகளான விவசாயம், கடற்றொழில், மற்றும் கைத்தொழில் துறைகள் முறையே 8.8 சதவீதம், 8.5 சதவீதம் மற்றும் 6.1 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்துள்ளது.

நாட்டின் மொத்த ஏற்றுமதி வருவாயில் கைத்தொழில் துறைக்குள் 41.32 சதவீதத்துக்குப் பங்களிப்புச் செலுத்திய ஆடைத் துறையின் ஏற்றுமதித் துறையிலிருந்தான வருவாயானது, 2014 ஆம் ஆண்டில், 9.23 சதவீதத்தினால் அதிகரித்துள்ளது.

எமது ஏற்றுமதிகளில் 31.35 சதவீதம் மற்றும் 24.43 சதவீதத்துக்குப் பங்களிப்புச் செலுத்திய எமது பிரதான ஏற்றுமதிச் சந்தைகளான ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் ஐக்கிய அமெரிக்காவுக்கான ஏற்றுமதிகள் 2014 ஆம் ஆண்டு காலப்பிரிவில் முறையே 6.43 சதவீதத்தினாலும், 9.14 சதவீதத்தினாலும், அதிகரித்துள்ளன.

**இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபையின் நடவடிக்கைகளின் செயலாற்றுகை**

இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபை, நிரம்பல் சங்கிலியின் வினைத்திறனை விருத்தி செய்வதற்கு ஒன்றிணைக்கப்பட்ட நிரம்பல் / உற்பத்திப் பொருட்கள் / வடிவமைப்பு / தரம் / பொதியிடல் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்கள் வர்த்தக வசதிளிப்பு, வர்த்தகத் தகவல்களை வழங்கல் , இலத்திரனியல் வர்த்தக சேவைகள் போன்ற நிகழ்ச்சித் திட்டங்கள் பலவற்றை நடைமுறைப்படுத்தியுள்ளது. ஏற்றுமதி அபிவிருத்திச் சபை, ஏற்றுமதியாளர்கள் தமது சந்தைகளைத் தக்க வைத்துக் கொள்ளவும், புதிய மற்றும் புதிதாகத் தோற்றம் பெற்று வரும் சந்தைகளை ஊடுருவவும் உதவும் நோக்குடன் சந்தை மேம்பாட்டு நிகழ்ச்சித் திட்டத் தொடர்கள் பலவற்றை ஏற்பாடு செய்துள்ளது. தெரிவு செய்யப்பட்ட சந்தைகளில் தெரிவு செய்யப்பட்ட சர்வதேச வர்த்தகக் கண்காட்சிகளில் இலங்கையின் பங்கேற்பினை ஏற்பாடு செய்தல், உள் நோக்கிய மற்றும் வெளி நோக்கிய வர்த்தகத் தூதுவர் குழுக்களை ஏற்பாடு செய்தல், தரமான உற்பத்திப் பொருட்களினதும், சேவைகளினதும் நம்பகமான வழங்குனராக இலங்கையின் பிரதிபிம்பத்தைத் திட்டமிடுவதற்கான ஆக்கரமிப்பு சந்தைத் தொடர்பாடல் பிரச்சாரம், தனிப்பட்ட பண்புகளுடன் இலங்கையின் உற்பத்திப் பொருட்களுக்கான தேசிய வர்த்தக இலச்சினையிடல் பிரச்சாரம், புவியியல் ரீதியான அடையாளம் போன்றன இலங்கை அபிவிருத்திச் சபையினால் மேற்கொள்ளப்படும் ஒரு சில நடவடிக்கைகளாகும். பிராந்திய ஏற்றுமதி அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்கள் நிரம்பலின் அடிப்படையை விசாலப்படுத்துவதற்காகவும், கிராமிய திறன்களையும், வளங்களையும் மேம்படுத்துவதற்காக நடைமுறைப்படுத்தப்பட்டன.

**2014 ஆம் ஆண்டு காலப்பிரிவில் ஏற்றுமதி அபிவிருத்திச் சபையினால் நடைமுறைப்படுத்தப்பட்ட பிரதான அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்கள்**

- **இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபையின் உபாயத் திட்டம் 2015-2020**

2015 – 2020 ஆண்டு காலப்பிரிவிற்கான புதிய உபாயத் திட்டமொன்றினை வகுப்பதற்கான செயன்முறையில் ஏற்றுமதி அபிவிருத்திச் சபையானது, ஏற்றுமதி அபிவிருத்திச் செயன்முறையில் ஈடுபட்டுள்ள அரச மற்றும் தனியார் துறை நிறுவனங்களுடன் ஆலோசனைகளை வழங்குவதன் மூலமும், ஒருங்கிணைந்தும் செயற்பட்டு வருகின்றது.

## ➢ தேசிய ஏற்றுமதி உபாயம்

ஏற்றுமதி அபிவிருத்திச் சபை, ஏற்றுமதி அபிவிருத்திச் செயன்முறையில் ஈடுபட்டுள்ள அரச மற்றும் தனியார் துறை நிறுவனங்களின் ஆலோசனைகளை வழங்குவதன் மூலமும், ஒருங்கிணைந்தும் 2015 – 2020 ஆண்டு காலப்பிரிவிற்கான தேசிய ஏற்றுமதி உபாயத்தினை வகுப்பதற்கான நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளது.





தேசிய ஏற்றுமதி உபாயத்தினை வகுப்பதற்கான தொழில் நுட்ப உதவியினை ஜெனீவா தகவல் தொழில்நுட்ப நிலையத்திடமிருந்து பெற்றுக் கொள்ளப்படும். தகவல் தொழில்நுட்ப நிலைய முன் ஈடுபாட்டுத் தூதுவர்குழு 2014 ஆகஸ்ட் மாதம் இலங்கைக்கு விஜயம் செய்ததோடு, தொடர்புடைய பங்கேற்பாளர்களுடன் ஆரம்ப ஆலேசனைகளை நடாத்தியுள்ளது.

## ➢ ஆலோசனைக் குழுக்கள்

ஏற்றுமதி அபிவிருத்திச் சபை ஏற்றுமதி வர்த்தகத்துக்கு வசதியளிப்பதற்கு அவசியமான அரச மற்றும் தனியார் பங்கேற்பினைப் பலப்படுத்துவதில் பயன்படுத்தப்படும் பிரதான சாதனமொன்றாக ஏற்றுமதி அபிவிருத்திச் சபைச் சட்டத்தின் கீழ் 26 ஆலோசனைக் குழுக்களை ஸ்தாபித்தது. இவ்வாலோசனைக் குழுக்கள் தற்போது ஏற்றுமதி அபிவிருத்திச் சபையுடன் தீவிரமாக பணிபுரிந்து வருகின்றன.

## ➢ ஏற்றுமதி அபிவிருத்திச் சபைக்கான நில அளவை மட்டக்குறி நிகழ்ச்சித் திட்டங்கள் - செயல்திறன் விருத்தித் திட்டம்



ஏற்றுமதி அபிவிருத்திச் சபையின் வினைத்திறனையும், செயல் திறனையும் மதிப்பீடு செய்தல் மற்றும் ஏனைய வர்த்தக மேம்பாட்டு நிறுவனங்களில் அதாவது வர்த்தக மேம்பாட்ட நிறுவனமொன்றாக ஏற்றுமதி அபிவிருத்திச் சபையை நிலைப்படுத்தல் போன்ற இன்னோரன்ன நோக்கங்களுடன் 2012 ஆம் ஆண்டில் ஏற்றுமதி அபிவிருத்திச் சபைக்காக ஜெனீவாவிலுள்ள தகவல் தொழில்நுட்ப நிலையத்தினால் திறனளவிடல் நிகழ்ச்சித் திட்டம் ஒன்று நடாத்தப்பட்டது.

திறனளவிடல் நிகழ்ச்சித் திட்டத்தின் தொடர் நடவடிக்கையாக ஏற்றுமதி அபிவிருத்திச் சபைக்கான செயல் திறன் விருத்தித்திட்டத்தினை மேற்கொள்வதற்காக ஜுலை மாதத்தில் இலங்கைக்கு ஏ 03 அங்கத்துவத் தகவல் தொழில்நுட்ப நிலைய தூதுவர் குழுவொன்று இலங்கைக்கு விஜயம் செய்தது.

## ➢ ஏற்றுமதியாளர்களின் பேரவை





கௌரவ கைத்தொழில் மற்றும் வணிக அமைச்சரின் தலைமையின் கீழ் ஒரு பேரவை நடாத்தப்பட்டதோடு, அப்பேரவையில் மொத்தம் 53 பிரச்சினைகள் கலந்துரையாடப்பட்டன.

**சந்தை அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்கள்**

➢ தற்போது நடைமுறையிலுள்ள புதிய மற்றும் எழுச்சி பெற்று வரும் சந்தைகளில் இலங்கையின் உற்பத்திப் பொருட்களினதும், சேவைகளினதும் வெற்றிகரமான ஊடுருவலை உறுதிப்படுத்தும் நோக்கத்துடன் மீளாய்வுக்கு உட்படுத்தப்பட்ட காலப்பிரிவில், ஏற்றுமதி அபிவிருத்திச் சபையினால் பின்வரும் சந்தை மேம்பாட்டு நிகழ்ச்சித் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டன. இந்நிகழ்ச்சித் திட்டங்களில் பல எமது வெளிநாட்டுத் தூதுவர் குழுக்களின் உதவியுடன் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

- ***ஐரோப்பிய ஒன்றியப் பிராந்தியம்:*** அலிமென்டேரியா, பார்சலினா, ஸ்பெய்ன் (5 ஏற்றுமதியாளர்கள்) சீ புட் எக்ஸ்போ குலோபல் 2014, பெல்ஜியம் (5 ஏற்றுமதியாளர்கள்), சியல் கனடா (5 ஏற்றுமதியாளர்கள்), இன்டர்சு ஜேர்மன் (7 ஏற்றுமதியாளர்கள்), பேபர் வேர்ல்ட் 2014, ஜேர்மன் (3 ஏற்றுமதியாளர்கள்)

**அமெரிக்கப் பிராந்தியம்:**

- ஜஎப்டீ 2014, நியூ ஓரிலன்ஸ், ஐக்கிய அமெரிக்கா [ 2 ஏற்றுமதியாளர்கள் ]

***ஆசியப் பிராந்தியம்:***

புட்டெக்ஸ் 2014, ஜப்பான் (4 ஏற்றுமதியாளர்கள்), சர்வதேச தோட்டக்கலை, கொரியா ( 6 ஏற்றுமதியாளர்கள்), ஜப்பானின் தகவல் தொழில்நுட்ப வாரம் வர்த்தகக் கண்காட்சி ( 4 கம்பனிகள்), குன்மினில் 2 ஆவது சீன தென்னாசிய நிலைப்படுத்துகை (120 ஏற்றுமதியாளர்கள்), இந்திய சர்வதேச வர்த்தகக் கண்காட்சி (5 ஏற்றுமதியாளர்கள்)

***மத்திய கிழக்குப் பிராந்தியம்*** : **பொதுநலவாய சுதந்திர நாடுகள் மற்றும் ஆபிரிக்கப் பிராந்தியம்:**

- கல்ப் உணவு 2014, பெப்ரவரி ( 23 ஏற்றுமதியாளர்கள்), சய்டெக்ஸ் வர்த்தகக் கண்காட்சி, தென்னாபிரிக்கா (12 ஏற்றுமதியாளர்கள்)

➢ உள்நோக்கிய மற்றும் வெளி நோக்கிய வர்த்தகத் தூதுவர் குழுக்களை ஏற்பாடு செய்தல்

வெளி நோக்கிய கொள்வனவுத் தூதுக் குழுக்கள் மியன்மாரில் இடம்பெற்ற மியன்மார் நிர்மாண உச்சி மாநாடு மற்றும் சந்தை அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்திற்கான 18 அங்கத்துவ தூதுவர் குழுக்கள், பஹ்ரைனுக்கான 20 அங்கத்துவ வர்த்தகத் தூதுவர் குழுக்கள, இஸ்ரேலுக்கான 20 அங்கத்துவ வர்த்தக தூதுவர் குழுக்கள், டியுனேசியாவுக்கான 3 அங்கத்துவ வர்த்தக தூதுவர் குழுக்கள், இந்தியாவுக்கான 5 அங்கத்துவ வர்த்தக தூதுவர் குழுக்கள், மாலைதீவுக்கான 15 அங்கத்துவ வர்த்தக தூதுவர் குழுக்கள், பிரேசிலுக்கான 9 அங்கத்துவ வர்த்தக தூதுவர் குழுக்கள் (ஆடை), மாலைதீவுக்கான 23 அங்கத்துவ வர்த்தக தூதுவர் குழுக்கள் [கல்வித் துறை]

**உள்நோக்கிய கொள்வனவு தூதுவர் குழுக்கள் -** மாலைதீவு தூதுவர் குழுவொன்று தொற்று நோய் தடுப்புக் காப்பு மேற்பார்வை பொது நிர்வாகத்திலிருந்து ஒரு தூதுவர் குழு, சீனாவின் கண்காணிப்பு மற்றும் தரம், சீன புஜியான் மாகாணத்திலிருந்து 20 அங்கத்துவ தூதுவர் குழுக்கள், 3 அங்கத்துவ சீன தூதுவர் குழுக்கள், பிரிந்தாஸ சிங்கப்பூரிலிருந்து 2 அங்கத்துவ தூதுவர் குழுக்கள், சீசெல்சிலிருந்து 4 அங்கத்துவ தூதுவர் குழுக்கள், எகிப்து மற்றும் போலந்திலிருந்து தூதுவர் குழுக்கள்

**சந்தை ஆராய்ச்சி :** ஒரு சில பெரிய ஏற்றுமதிச் சந்தைகளில் தங்கியிருப்பதனைக் குறைப்பதற்காக எமது ஏற்றுமதிகளை பன்முகப்படுத்தும் நோக்குடன் ஏற்றுமதி அபிவிருத்திச் சபை பிரேசில்,

தென்னாபிரிக்கா, மற்றும் சீன சந்தைகளை ஊடுருவும் நோக்குடன் அச்சந்தைகள் தொடர்பாக சந்தை ஆராய்ச்சிகளை மேற்கொண்டது. பிரிக்ஸ் குழுவின் அங்கத்துவ நாடுகளான பிரேசிலும், தென்னாபிரிக்காவும், உயர் பொருளாதார வளர்ச்சி வாய்ப்புக்களுடனான ஒரு நிலையமாக இனங்காணப்பட்டுள்ளது. ஏற்றுமதி அபிவிருத்திச் சபை ஏற்றுமதியாளர்களுடன் இச்சந்தைகளை ஆராய்வதற்காக பலவேறு தூதுவர் குழுக்களை மேற்கொண்டது. பிரேசிலுக்கான முதலாவது இலங்கை ஆடை மேம்பாட்டுத் தூதுவர் குழு ஏற்றுமதி அபிவிருத்திச் சபையினாலும், JAFF இனாலும் பிரேசிலிலுள்ள இலங்கை தூதரகத்தினாலும், 2014 செப்தெம்பர் மாதத்தில் ஏற்பாடு செய்யப்பட்டதோடு, 09 பிரதான ஆடைக் கம்பனிகளும், 5 சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில்முயற்சிகளும் பங்குபற்றின.

- உள்ளூர் வர்த்தகக் கண்காட்சிகளிலான பங்கேற்பினை ஏற்பாடு செய்தல்
  - பேசட்ஸ் 2014
  - காலணி மற்றும் தோற் பொருட்கள் கண்காட்சி 2014

**விவசாய உற்பத்திப் பொருட்கள், கைத்தொழில் உற்பத்திப் பொருட்கள், மற்றும் சேவைகளுக்காக நடைமுறைப்படுத்தப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்கள்**

- **சிலோன் கறுவா வர்த்தக இலச்சினையிடல்**

ஏற்றுமதி அபிவிருத்திச் சபை சர்வதேச சந்தையில் உலக வர்த்தக இலச்சினையாக தூய சிவோன் கறுவா ஸ்தாபிக்கப்பட்டது. ஐக்கிய அமெரிக்கா, ஐக்கிய இராச்சியம், கொலம்பியா, பேரு போன்ற பிரதான சந்தைகளில் வர்த்தக சின்னங்களின் பதிவானது ஏற்கனவே பூர்த்தி செய்யப்பட்டுள்ளது. தூய சிலோன் கறுவாவிற்கான வர்த்தக சின்னத்தை WIPO உடனும் பதிவு செய்யப்பட்டுள்ளது.

ஏற்றுமதி அபிவிருத்திச் சபையானது, ஐரோப்பிய சந்தையில் சிலோன் கறுவாவிற்கான புவியியல் ரீதியான அடையாளத்தினைப் பெற்றுக் கொள்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது.

- **தூய சிலோன் கறுவா லயன் இலச்சினையை வழங்குவதற்கான திட்டம்**



ஏற்றுமதி அபிவிருத்திச் சபை 13 தகுதி வாய்ந்த ஏற்றுமதியாளர்கள் தமது பெறுமதி சேர்க்கப்பட்ட கறுவா ஏற்றுமதிகளில் தூய சிலோன் கறுவா இலச்சினையைப் பயன்படுத்துவதற்கு அனுமதிப்பத்திரம் வழங்கியது. உலகளாவிய சந்தைகளுக்கு இவ்விலச்சினையானது எங்கிருந்து உற்பத்தி செய்யப்படுகின்றது என்பதை எடுத்துக் காட்டுகின்றது.

- **தேசிய சேதனக் கட்டுப்பாட்டு அலகை ஸ்தாபித்தல்**

தேசிய சேதனக் கட்டுப்பாட்டு அலகானது, சகல சேதன விவசாய உற்பத்திப் பொருட்களினதும் ஏற்றுமதி / இறக்குமதிகளைக் கட்டுப்படுத்துவதற்கு

தனிப்பட்ட தேசிய நிறுவனமொன்றாக ஸ்தாபிக்கப்பட்டுள்ளது. இது சர்வதேச சந்தையில் சேதன உற்பத்திப் பொருட்களின் பாதுகாப்பிற்கு வசதியளிக்கவும், நம்பகத் தன்மையைப் பாதுகாக்கவும் வசதியளிப்பதோடு, இலங்கைக்கு இறக்குமதி செய்யப்படும் அவ்வாறான உற்பத்திப் பொருட்களின் தரத்தினையும், பாதுகாப்பையும் உறுதிப்படுத்துகின்றது. சேதன உற்பத்திப் பொருட்களின் சகல உற்பத்தியாளர்கள், பதப்படுத்துவோர், தயாரிப்பாளர்கள், ஏற்றுமதியாளர்கள்/இறக்குமதியாளர்கள் தேசிய சேதனக் கட்டுப்பாட்டு அலகில் பதிவு செய்வது அவசியமாக உள்ளதோடு, சேதன தர நியமங்களுக்கு இணங்கக் கடைப்பிடித்தல் வேண்டும். சேதன உற்பத்திப் பொருளென்ற வர்த்தகக் குறியை இடுவதற்கு சர்வதேச ரீதியாக ஏற்றுக் கொள்ளப்பட்ட சான்றுப்படுத்தும் நிறுவனமொன்றிடமிருந்து சேதனச் சான்றுப்படுத்தலைப் பெற்றுக் கொள்ளல் வேண்டும்.

- **விவசாய ஏற்றுமதி வலயங்கள்**

ஏற்றுமதி அபிவிருத்திச் சபையானது கிராமியச் சமூகத்திற்கான ஏற்றுமதிகளின் நன்மைகளை பரவச் செய்யும் அதே வேளை, விவசாய நிரம்பலை அடிப்படையாகக் கொண்ட ஏற்றுமதிகளை விரிவாக்கும் நோக்கத்துடன் விவசாய ஏற்றுமதி வலயங்களை ஸ்தாபிப்பதற்கும், நிலைக்கச் செய்வதற்கும் உதவியுள்ளது. தென் மாகாணத்தில் கறுவாப்பட்டை உரிக்கும் தர நியமங்களைத் தரமுயர்த்துவதற்கு கறுவாக் கைத்தொழிலுக்கான 15 சிறந்த செயன்முறை நடைமுறை நிலையங்களும் ஸ்தாபிக்கப்பட்டுள்ளன.

பொலன்னறுவை மாவட்டத்தில் ஏற்றுமதிகளுக்கான அலங்கார மீன்களின் இனப்பெருக்கத்திற்கான நிகழ்ச்சித் திட்டமொன்று நடாத்தப்பட்டது. 2013 மற்றும் 2014 ஆம் ஆண்டுகளில் சிங்கப்பூர் அக்குவாராமா சர்வதேச நீரியல் வளக் காட்சியகத்தில் மீன்களுக்கான போட்டியொன்று இடம் பெற்றதோடு, அப்போட்டியின் வெற்றியாளர்களுள், பொலன்னறுவை விவசாய ஏற்றுமதி வலயத்திலிருந்து பங்கேற்ற மீன் இனப்பெருக்கக் காட்சியகமும் ஒன்றாகத் திகழ்வதோடு, இந்நிகழ்ச்சித் திட்டத்தின் வெற்றியானது சர்வதேச மட்டத்தில் எமது ஏற்றுமதியாளர்களைச் செயல்பட வைத்துள்ளது என்பதை வெளிப்படுத்திக்காட்டுகின்றது. அம்பாறை மாவட்டத்தில் மஞ்சள் பயிர்ச்செய்கை , கிழக்கு மாகாணத்தில் அன்னாசிப் பயிர்ச்செய்கைக் கருத்திட்டத்திற்கான நிகழ்ச்சித் திட்டமொன்றும் ஸ்தாபிக்கப்பட்டுள்ளது.

**தொற்று நோய் தடுப்புக்காப்பு / நிறுத்தி வைக்கும் வசதியளிப்புக்களை விருத்தி செய்வதற்கான நிதி உதவித் திட்டம்**

இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபை அலங்கார மீன் துறையின் தொற்று நோய்த் தடுப்புக்காப்பு / நிறுத்தி வைக்கும் வசதியளிப்புக்களை விருத்தி செய்வதற்கு 2013 ஆம் ஆண்டின் தேசிய வரவு செலவுத் திட்டத்தின் மூலம் அங்கீகரிக்கப்பட்ட நிதி உதவித் திட்டமொன்று நடைமுறைப்படுத்தப்பட்டது. மீளாய்வுக்கு உட்படுத்தப்பட்ட காலப்பிரிவில் 10 உடன்படிக்கைகள் கைச்சாத்திடப்பட்டதோடு, 4 கம்பனிகளுக்கு உதவிகள் வழங்கப்பட்டன.

**இலங்கையின் கைத்தறித்துறைக்கான வடிவமைப்பு அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம்**





நடவடிக்கைகளைப் பலப்படுத்தும் நோக்கத்துடன் ஏற்றுமதி அபிவிருத்திச் சபை ஜூன் மாதம் 30 ஆம் திகதி கொழும்பில் இலங்கையின் கைத்தறிகளுக்கான வடிவமைப்பு அபிவிருத்தி எனும் தொனியில் 50 இற்கும் அதிகமான இலங்கை கைத்தறி வடிவமைப்பாளர்கள் மற்றும் நிபுணர்களுக்கான செயலமர்வு ஒன்றை ஏற்பாடு செய்துள்ளது.

**கைவினைத் துறைக்கான சந்தை வர்த்தக நடைமுறைகளை அறிமுகப்படுத்தலும் நடைமுறைப்படுத்தலும்**



இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபை, வெளிநாட்டு கண்காட்சி – நியாயமான வர்த்தகம் தொடர்பான வர்த்தக நிபுணர் ஒருவரின் உதவியுடன் 2013 இல் இலங்கையின் கைவினைப் பொருட்களுக்கான நியாயமான வர்த்தகமொன்றினை அறிமுகப்படுத்துவதற்கான நிகழ்ச்சித் திட்டமொன்றினை நடாத்தியது. 2014 ஆம் ஆண்டில், இந்நிகழ்ச்சித் திட்டத்தின் 2 ஆம் கட்டத்தின் கீழ் நியாயமான வர்த்தக தர நியமங்களில் தனது தரத்தினை மேம்படுத்துவதற்கு தெரிவு செய்யப்பட்டது.

**2014 இலங்கையின் படகுக் கண்காட்சி மற்றும் கடற்றொழில் கண்காட்சி**

படகுக் கைத்தொழிலில் நேரடியாகவும், மறைமுகமாகவும் ஈடுபட்டுள்ள சகல தொடர்புபட்ட வர்த்தகத் துறைகளுக்கான தனிப்பட்ட ஒரு தளத்தினை வழங்கும் நோக்குடன் சாத்தியமான வாடிக்கையாளர்களுக்கான குறிப்பட்ட துறைகளைக் காட்சிப்படுத்தவும், மேம்படுத்தவும் படகுத் தொழில்நுட்ப மேம்பாட்டு நிறுவனம், வரையறுக்கப்பட்ட லங்கா கண்காட்சி மற்றும் மாநாட்டுச் சேவைகள் கம்பனி, கைத்தொழில் மற்றும் வணிக அமைச்சு, கடற்றொழில் மற்றும் நீரியல் வள அமைச்சு, திக்கோவிட்ட மீன்பிடித் துறைமுகம் ஆகியனவற்றின் ஆதரவுடன் 2014 அக்டோபர் மாதம் 10 – 12 ஆம் திகதி வரை ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இலங்கையில் இக்கண்காட்சியின் போது முதலாவதாக இடம் பெற்ற தண்ணீர் காட்சி இந்நிகழ்ச்சியின் சிறப்பியல்புகளுள் ஒன்றாக அமைந்திருந்தது. நீரின் மீதான 11 பாரிய படகுகளும், நிலத்தின் மீதான 9 கண்காட்சிக் கூடங்களும் உள்ளடங்கலாக 65 கண்காட்சிக் கூடங்கள் காணப்பட்டன.

**கடல் சார் கைத்தொழில் நிறுவனங்களின் சர்வதேச மன்றம் [ICOMIA]**

கடல் சார் கைத்தொழில் நிறுவனங்களின் சர்வதேச மன்றத்தின் [ICOMIA] பிராந்தியக் கூட்டம் 2014 படகுக் கண்காட்சிக்கு ஒப்புரவாக படகுக் கட்டட தொழில்நுட்ப மேம்பாட்டு நிறுவனம் மற்றும் BAF மன்றத்துடன் இணைந்து ஏற்பாடு செய்திருந்தது.

இலங்கையின் கடல்சார் அபிவிருத்தி மற்றும் கடல் சார் சுற்றுலா தொடர்பான கைத்தொழில் மாநாடும் இடம்பெற்றது. கடல் சார் கைத்தொழில் நிறுவனங்களின் சர்வதேச மன்றத்தின் முதன்மை வாய்ந்த பேச்சாளர்கள் கடல்சார், நீர் முன் அபிவிருத்தி, கடல்சார் பிரதான திட்டம், வடிவமைப்புத் தேவைப்பாடுகள், நிலையான தன்மை, மற்றும் இலங்கைக்கு நன்மைகளை அளிக்கக் கூடிய பல்வேறு விடயங்கள்

தொடர்பான தமது அனுபவங்களை இம்மாநாட்டில் பகிர்ந்து கொண்டனர்.

**உலகளாவிய இறப்பர் மாநாடு [ GRC ] 2014**




ங்கையில் முதன் முதலாக அக்டோபர் மாதம் 27 – 30 ஆம் திகதி வரை இறப்பர் கைத்தொழிலில் புகழ்பெற்ற சர்வதேச தலைவர்கள், இலங்கையின் இறப்பர் தயாரிப்பாளர்கள், ஏற்றுமதியாளர்கள் ஆகியோரின் பங்கேற்புடன் நடாத்தப்பட்டது. உலகளாவிய இறப்பர் மாநாடானது, இயற்கை இறப்பர், மற்றும் இயற்கை இறப்பரை அடிப்படையாகக் கொண்ட உலகின் பிரதான மாநாடுகளுள் ஒன்றாக இனங்காணப்பட்டுள்ளது.

இம்மாநாடானது, இறப்பர் கைத்தொழிலின் தற்போதைய போக்குகள் மற்றும் இக்கைத்தொழிலால் முகங்கொடுக்கப்பட்ட எதிர்கால சவால்கள் தொடர்பான புதுப்பித்தல்களை வழங்குவதற்கு இறப்பர் கைத்தொழிலின் ஒழுங்கு முறை அதிகார சபைகள் மற்றும் வர்த்தக வீரர்களை ஒன்று சேர்க்கும் ஐந்து பிரதான நோக்கங்களைப் பூர்த்தி செய்வதனை குறிக்கோளாகக் கொண்டிருந்ததோடு, புதிய வாய்ப்புக்களைத் திறப்பதற்கும் விரிவாக்குவதற்குமான தகவல்களைப் பரிமாற்றிக் கொள்வதற்கான வசதியளித்தல், பொதுவாக கிழக்காசிய மற்றும் ஆசிய பசுபிக் நாடுகளில் விசேடமாக கண்காட்சிகளை நடாத்தும் நாடுகளில் கைத்தொழில் வாரியான முதலீட்டு வாய்ப்புக்களை விருத்தி செய்தல், கொள்கைத் தயாரிப்பாளர்களும், சங்கத் தலைவர்களும் கலந்துரையாடுவதற்கான தளமொன்றை அளித்தல், கைத்தொழில் நிபுணர்கள் சமீபத்திய ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திக் கண்டு பிடிப்புக்களைத் தொடர்பு கொள்வதற்கேற்றவாறு, கைத்தொழில்களுக்கிடையில் காரணிகளைத் தீர்மானித்தல் போன்றனவற்றையும் மையமாகக் கொண்டுள்ளது.

**இலங்கையின் முதலாவது அலங்கார மீன் வர்த்தக மாநாடு (INFOFISH 2014)**




இலங்கையின் முதலாவது சர்வதேச அலங்கார மீன் வர்த்தக மாநாடானது, இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபை, கடற்றொழில் மற்றும் நீரியல் வள அபிவிருத்தி அமைச்சு, மலேசியாவில் அமைந்துள்ள சந்தைப்படுத்தல், தகவல் மற்றும் தொழில்நுட்ப ஆலோசனை சேவைகளுக்கான ஆசிய பசுபிக் பிராந்தியத்திற்கான அரசாங்கங்களுக்கு இடையிலான நிறுவனமான இன்போபிஷ் அலங்கார நீரியல் கைத்தொழிலின் சகல துறைகளையும் பிரதிநிதித்துவப்படுத்தும் உலகளாவிய நிறுவனமொன்றான அலங்கார மீனின் சர்வதேச நிறுவனம் (OFI) ஆகியன ஒன்றிணைந்து நடாத்தப்பட்டது.

இம்மாநாடானது 2014 நவம்பர் மாதம் 10 ஆம் திகதி கொழும்பு கலதாரி ஹோட்டலில் விழாவாரியாகத் திறந்து வைக்கப்பட்டது. இம்மாநாட்டின் மூலம் தென்னாசியாவில் முதன் முறையாக பல உயர் மட்ட உலகளாவிய

கடற்றொழில் நிபுணர்கள், மற்றும் ஏற்றுமதியாளர்களை ஒரே இடத்தில் ஒன்று சேர்க்கக் கூடியதாக இருந்தது.

அலங்கார மீன் சந்தையின் நிலைப்பாடு, நிரம்பல் உள்நாட்டு மற்றும் சர்வதேச வர்த்தகத்துடன் தொடர்புடைய வர்த்தகப் பிரச்சினைகளை இம்மாநாடு மையமாகக் கொண்டிருந்தது. அலங்கார மீன் பண்ணை, சுகாதாரம், போன்ற இன்னோரன்ன பல்வேறுபட்ட உப துறைகளின் சமீபத்திய முன்னேற்றங்களும் கலந்துரையாடப்பட்டன. அலங்கார மீன் கைத்தொழிலிலுள்ள பல்வேறு உப பிரிவுகளைப் பிரதிநிதித்துவப்படுத்துவதன் மூலம் 300 இற்கும் அதிகமான உள்ளூர் மற்றும் சர்வதேசத் தூதுவர்கள் இவ்விரண்டு நாள் கருத்தரங்கில் பங்கேற்றார்கள்.

## ஏற்றுமதிச் சேவைகள்

- அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளிலிருந்தான இறக்குமதிகளின் மேம்பாட்டு நிலையம் ( சீபீஜ ) – ஏற்றுமதிப் பயிற்சி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் நெதர்லாந்தின் அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளிலிருந்தான இறக்குமதிகளின் மேம்பாட்டு நிலையத்தின் (சீபீஜ) ஆலோசகர் ஒருவர் 7 தெரிவு செய்யப்பட்ட கம்பனிகளுக்கு விஜயம் செய்ததோடு, வர்த்தக சந்தைப்படுத்தல் திட்டம் தொடர்பாக அவர்கள் அறிவுறுத்தப்பட்டார்கள்.

அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளிலிருந்தான இறக்குமதிகளின் மேம்பாட்டு நிலையத்தின் (சீபீஜ) உதவியுடன், ஏற்றுமதி அபிவிருத்திச் சபையின் இணையத்தள விரிவாக்கமும், நிகழ்நிலையிலான தகவல் தொழில்நுட்பம் /சிறந்த செயன்முறைச் செயற்பாடுகள் தொடர்பான மாநாடு ஒன்றை 30 பங்கேற்பாளர்களுக்காக 2014 ஜுன் மாதம் 19 ஆம் திகதி முதல் 20 ஆம் திகதி வரை ஏற்பாடு செய்தது.

- “இலத்திரனியல் மற்றும் தகவல் தொடர்பாடல் மற்றும் தொலைத்தொடர்பு துறைகளைப் பிரதிநிதித்துவப்படுத்துவதன் மூலம் 84 பங்கேற்பாளர்களுக்காக “விடயங்களின் இணையத்தளம்” தொடர்பான மாநாடு ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டது. இலத்திரனியல் தயாரிப்பாளர்கள் தகவல் தொடர்பாடல் தொலைத்தொடர்புத் துறை வடிவமைப்புக் கம்பனிகளின் ஆதரவுடன் இலங்கையில் இனிப்புப் பண்டங்களைத் தயாரிக்கக் கூடிய புதிய கருவிகள் தொடர்பாக அறிவூட்டப்பட்டது.





- 80 பங்கேற்பாளர்களுக்கான “ இலவச மற்றும் திறந்த மூல மென்பொருட்கள் [FOSS]” தொடர்பான மாநாடு ஒன்று மே மாதம் 29 ஆம் திகதி கொழும்பில் ஏற்பாடு செய்யப்பட்டது.




- **இலங்கையின் மென்பொருட்களுக்கான வர்த்தக இலச்சினை (ஆரம்ப வேலை)**

அரசாங்க நிறுவனங்கள், கைத்தொழில் சங்கங்கள், மென்பொருள் அபிவிருத்திக் கம்பனிகள், பீபீஎம் / கேபீஎம், கல்வி, உட்கட்டமைப்பு, பொறியியல் துறைகள், ஆகியனவற்றைப் பிரதிநிதித்துவப்படுத்தும் 25 அங்கத்தவர்களை உள்ளடக்கிய ஒரு குழு கலந்துரையாடுவதற்கும், வர்த்தக இலச்சினைச்

செயன்முறையை நடைமுறைப்படுத்துவதற்கும் பொருத்தமான முறையைக் கொண்டு வருவதற்காக நியமிக்கப்பட்டது. இலங்கையின் வர்த்தக இலச்சினை தொடர்பான தகவல் தொடர்பாடல் தொலைத்தொடர்புக் கம்பனிகளுக்கு அனுப்பிய வினாக் கொத்துக்களுக்கு 62 பதில்கள் கிடைக்கப் பெற்றன. அதன் பிரகாரம், வடிவமைப்பு தொடர்பான இச்செயன்முறையை மேற்கொள்வதற்கும், வர்த்தக இலச்சினைக்கான தொனிப்பொருளொன்றினை தெரிவு செய்வதற்கும், தகவல் தொடர்பாடல் தொலைத் தொடர்பு/பீபீஎம்மினால் பரிந்துரை செய்யப்பட்டது.

- மாகாணங்களிலிருந்து தகவல் தொடர்பாடல் தொலைத் தொடர்பு / வர்த்தகச் செயற்பாட்டுச் செயன்முறை ஏற்றுமதியாளர்களை உருவாக்கும் நோக்குடன் ஏற்றுமதி அபிவிருத்திச் சபையின் மாகாண அலுவலகங்களின் உத்தியோகத்தர்கள், SLASSCOM ஆகியனவற்றின் ஆதரவுடன் கண்டி, காலி, மற்றும் மாத்தறை மாவட்டங்களில் 25 தகவல் தொழில்நுட்பக் கம்பனிகளுக்கான அறிவைப் பரிமாற்றிக் கொள்ளும் தொடரொன்றும் கொழும்பிலுள்ள தகவல் தொழில்நுட்பப் பூங்காவுக்கான வெளிப்பாட்டு விஜயமொன்றும் ஏற்பாடு செய்யப்பட்டது.

**பிராந்திய அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்கள்**

மீளாய்வுக்கு உட்படுத்தப்பட்ட காலப்பிரிவில், ஏற்றுமதி அபிவிருத்திச் சபையானது, ஏற்றுமதி அபிவிருத்திக்கான கிராமிய வளங்களையும், திறன்களையும் திரட்டும் நோக்குடன் பல பிராந்திய அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களை நடைமுறைப்படுத்தியது. இந்நிகழ்ச்சித் திட்டங்கள் பின்வருமாறு:

- தேயிலைத் தயாரிப்பாளர்கள், ஏற்றுமதியாளர்கள், 2 தொழிற்சாலைகளின் கைத்தொழிலாளர்களுக்கான தரப்படுத்தல் பரப்பு இயலளவு அபிவிருத்திக்கான உதவித்திட்டம்.
- தேயிலைத் துறைக்கான திட்ட/ உற்பத்திச் சான்றுப்படுத்தலுக்கான உதவித்திட்டம் - 5 தொழிற்சாலைகள் இவ்வுதவியைப் பெற்றுக் கொண்டுள்ளன.
- வர்த்தக இலச்சினைகளின் பெயரினதும், வர்த்தக இலச்சினைகளின் முதன்மை நிலைகளினதும் அபிவிருத்திக்கான உதவித் திட்டம் - முதலாம் கட்டத்தில் உதவிக்காக 4 கம்பனிகள் தெரிவு செய்யப்பட்டிருந்ததோடு, 2 கம்பனிகள் ஏற்கனவே வர்த்தக இலச்சினை உதவித் திட்டத்தின் கீழ் உதவி வழங்கப்பட்டுள்ளனர். “வரையறுக்கப்பட்ட பெசிலூர் தேயிலை ஏற்றுமதிக் கம்பனிக்கு” வர்த்தக இலச்சினையின் பதிவுக்காக உதவி வழங்கப்பட்டுள்ளது.
- வலை மனைகளின் கீழ் மலர்ச் செடிகளைப் பயிரிடுவதற்கான நிரம்பல் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம் (அம்பாந்தோட்டை) – பயிரிடும் எட்டுப் பேர் உதவி வழங்குவதற்காகத் தெரிவு செய்யப்பட்டுள்ளதோடு, அவர்கள் ஏற்றுமதிக் கம்பனிகளுடன் நேரடியாக இணைக்கப்பட்டுள்ளனர்.
- வவுனியாவில் மஞ்சள் பயிர்ச்செய்கையை மேம்படுத்துவதற்கான நிகழ்ச்சித் திட்டம் - முதலாவது அறுவடை பெற்றுக் கொள்ளப்பட்டதோடு, மீளக் கொள்வனவு செய்யும் ஏற்பாட்டின் கீழ் விவசாயிகளை ஏற்றுமதியாளர்களுடன் இணைப்பதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.
- பழங்கள், வாசனைத் திரவியங்கள், பெறுமதி சேர்க்கப்பட்ட தேயிலை, வெட்டப்பட்ட மலர்ச் செடிகள், போன்றவற்றுக்கான அறிவூட்டல் நிகழ்ச்சித் திட்டங்கள் (CP, NWP, SP, and HO) – 6 நிகழ்ச்சித் திட்டங்கள் பூர்த்தி

செய்யப்பட்டுள்ளன. சுமார் 200 விவசாயிகளும் / வளர்ப்போரும் இந்நிகழ்ச்சித் திட்டங்களில் பங்கேற்றனர்.

- தெரிவு செய்யப்பட்ட விவசாயிகளினால் ஏற்றுமதிக்கான பிராந்தியங்களில் ஏற்றுமதி உயர் பெறுமதி வாய்ந்த காய்கறிகள், வாசனைத் திரவியங்கள் போன்றனவற்றிற்கு 16 ஈக நார் (பொலித்தீன்) சுரங்கங்கள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன. விவசாயிகள் ஏற்றுமதிக் கம்பனிகளுடன் இணைப்பதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.
- வட மேல் மாகாணத்தில் ஏற்றுமதியை அடிப்படையாகக் கொண்ட வெளிவாரியாக மலர்ச்செடிகளைப் பயிரிடுவோருக்கான ஏற்றுமதிச் சந்தைக்கான வெட்டிய மலர்ச் செடிகள், மலர்கள் போன்றனவற்றை உற்பத்தி செய்வது தொடர்பான அறிவூட்டல் மாநாடு / செயலமர்வு [102 வெட்டிய மலர்ச் செடிகள், மலர்கள்]
- பசுமை விவசாய உற்பத்திச் செயன்முறை மற்றும் சந்தைப்படுத்தல் தொடர்பான தொழில்நுட்ப வெளிப்பாடு மற்றும் அறிவூட்டல் நிகழ்ச்சி இஸ்ரேல் - 2014 – இலங்கையிலிருந்து பாதுகாக்கப்பட்ட விவசாய தொழில்முயற்சிச் சங்கத்திலிருந்து 7 கம்பனிகள் பங்கேற்றன.
- ஏற்றுமதியாளர்கள் / சாத்தியமான ஏற்றுமதியாளர்கள் தயாரிப்பாளர்கள் /வாசனைத் திரவியங்கள் மற்றும் வாசனை எண்ணெய்களின் தயாரிப்பாளர்கள் உற்பத்திச் சான்றுப்படுத்தல் திட்டத்தினைப் பெற்றுக் கொள்வதற்கான இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபையின் உதவித் திட்டம்
- அனுராதபுரத்தில் நாச்சியாதுவை பிரதேச செயலகப் பிரிவில் ஏற்றுமதியை அடிப்படையாகக் கொண்ட காலணித் தயாரிப்பாளர்களில் தெரிவு செய்யப்பட்ட குழுவொன்றிற்காக குளியலறைக் காலணிகளைத் தயாரிப்பதற்கான தொழில்நுட்ப அறிவூட்டல் தொடர்பான ஒரு நாள் பயிற்சி நிகழ்ச்சித் திட்டமொன்று / செயலமர்வொன்று வெற்றிகரமாக நடாத்தப்பட்டது.

**ஏனைய நிகழ்ச்சித் திட்டங்கள்**

இலங்கையின் உற்பத்திப் பொருட்கள் மற்றும் சேவைகளுக்கான இலத்திரனியல் மேம்பாடு - இணையத்தள சந்தைப்படுத்தல் தொழில்நுட்பத்தினைப் பயன்படுத்துவதன் மூலம் இலங்கையின் உற்பத்திப் பொருட்கள் மற்றும் சேவைகளை மேம்படுத்துவதற்காக ஏற்றுமதி அபிவிருத்திச் சபையின் www.srilankabusiness.com இணையத் தளத்தின் ஊடாக இலத்திரனியல் சந்தைப்படுத்தல் பிரச்சாரம் ஒன்று நடாத்தப்பட்டது.

**நிகழ்நிலையலான வர்த்தக இணையத்தளம் -** இணையத்தளத்தின் ஊடாக ஐக்கிய இராச்சியம், சுவீடன், மற்றும் ஜேர்மனைச் சேர்ந்த கொள்வனவாளர்களுடன் இலங்கையின் வாசனைத் திரவியங்கள், மூலிகை உற்பத்திப் பொருட்கள், மற்றும் ஒப்பனைப் பொருட்களுக்கு ஐந்து நிகழ்நிலையிலான கொடுக்கல் வாங்கல்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இக்காலப்பிரிவிற்குள் தேயிலை, ஆடை, தோல் உற்பத்திப் பொருட்கள், உணவுப் பொருட்கள், நீல சபாயா, துகள்களாக்கப்பட்ட தேங்காய், வேகமான மோட்டார் படகுகள், காய்கறிகள், பச்சை மிளகாய், அன்னாசி ஆகியனவற்றுக்கு 15 நிகழ்நிலையிலான உற்பத்தி விசாரணைகள் கிடைக்கப் பெற்றுள்ளன.



**ஏற்றுமதிச் செயலாற்றக் குறிகாட்டிகள் – 2004-2013**

ஏற்றுமதிச் செயலாற்றக் குறிகாட்டிகள் – 2004-2013 இன் அச்சிடப்பட்ட வெளியீடும் , இலத்திரனியல் பதிப்பும் வெளியிடப்பட்டுள்ளன. இவ்வெளியீடாது இலங்கையின் ஏற்றுமதித் துறையுடன் தொடர்புடைய முழுமையான தரவுகளை உள்ளடக்கியுள்ளது.

**திறன்கள் அபிவிருத்தி மற்றும் பயிற்சி நிகழ்ச்சித் திட்டம்**

மீளாய்வுக்குட்படுத்தப்பட்ட காலப்பிரிவில் ஏற்றுமதி அபிவிருத்திச் சபை மாத்தறை, கொழும்பு, கண்டி, பதுளை, காலி, அம்பாந்தோட்டை, நுவரெலியா, மொனராகலை, ஆகிய மாவட்டங்களில் ஏற்றுமதியுடன் தொடர்புடைய நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள 2,673 தொழில்முயற்சியாளர்களின் பங்கேற்புடன் 42 திறன்கள் மற்றும் தொழில்முயற்சி அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களை நடாத்தியது. இந்நிகழ்ச்சித் திட்டங்கள் சந்தைகள், சாத்தியமான உற்பத்திப் பொருட்கள், பிரதான சந்தைகளின் ஒழுங்கு முறை விதிகளும், செயன்முறைகளும் இறக்குமதி ஏற்றுமதிச் செயன்முறைகள், பொதியிடல், மற்றும் குறிப்பிட்ட உற்பத்திப் பொருட்களுக்குரிய தொழில்நுட்பத் திறன்களை விருத்தி செய்தல் போன்றன தொடர்பான அறிவை உருவாக்கும் குறிக்கோளினை இந்நிகழ்ச்சித் திட்டங்கள் கொண்டிருந்தன.

இறக்குமதி ஏற்றுமதிச் செயன்முறைகள் தொடர்பான மூன்று சான்றிதழ் பாடநெறிகளும், "சர்வதேச வர்த்தகம் தொடர்பான செயற்பாட்டு நிலைகள் தொடர்பான இரண்டு நிகழ்ச்சித் திட்டங்களும் நடாத்தப்பட்டதோடு, கிட்டத்தட்ட 234 தொழில்முயற்சியாளர்கள் இக்காலப்பிரிவில் இந்நிகழ்ச்சித் திட்டங்களின் ஊடாக பயிற்சியளிக்கப்பட்டனர்.

Policy & Strategic Planning Division
26.02.2015

UKD/NS/psw

# 2015 இற்கான திட்டங்கள்

**ஏற்றுமதி மேம்பாட்டு நிகழ்ச்சித் திட்டங்கள்**

விவசாயம், கடற்றொழில், கைத்தொழில் மற்றும் சேவைகள் துறைகளை மேம்படுத்துவதற்கான ஒன்றிணைக்கப்பட்ட நிரம்பல் / உற்பத்திப் பொருட்கள் / வடிவமைப்பு/ பொதியிடல் மற்றும் சந்தை அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்கள்.

- இலங்கைக்கான ''தேசிய ஏற்றுமதி உபாயம் 2015 – 2020'' இனை வகுத்தல்.
- ஏற்றுமதி அபிவிருத்திச் சபைக்கான ''உபாயத் திட்டம் 2015 – 2020 இனை வகுத்தல்.
- இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபையின் செயல் திறன் விருத்தித் திட்டம்.
- தெரிவு செய்யப்பட்ட சர்வதேச சந்தைகளில் "சிலோன் கறுவா'' வர்த்தக இலச்சினை அபிவிருத்தி மற்றும் மேம்பாட்டு நிகழ்ச்சித் திட்டம் - வர்த்தகக் குறி மற்றும் ஜி ஐ பதிவு.
- ''தூய சிலோன் கறுவா'' லயன் இலச்சினையை வழங்குவதற்கான சின்னம்
- ஏற்றுமதி வருமானத்தினை அதிகரிப்பதற்கான கூட்டு இலச்சினைக்கான உதவி
- தெரிவு செய்யப்பட்ட பழப்பயிர்களுக்கான ஏற்றமதியை அடிப்படையாகக் கொண்ட விவசாய வலயங்களின் கருத்திட்டத்தினை ஸ்தாபித்தல் [EDB, DOA & F&V Association]
- நன்னீர் மீன் உற்பத்தியை அதிகரிப்பதற்காக இலங்கையின் நன்னீர் மீன் துறையின் அபிவிருத்தி [EDB & NAQDA]
- நோய்த்தடுப்பு தற்காப்பு / அலங்கார மீன் ஏற்றுமதியாளர்கள் மறைமுக /ஏற்றுமதியாளர்களின் நிறுத்தி வைத்தல் வசதியளிப்புக்களை விருத்தி செய்வதற்கான உதவி
- உயர் தொழில்நுட்பம் மீது முதலீடு செய்வதற்கு ஏற்றுமதியாளர்களுக்கு உதவி செய்தலும், ஊக்குவித்தலும் [புதிய கண்டு பிடிப்புக்களும், புதுப்பித்தலும்]
- இலங்கை தேசிய பொதியிடல் நிலையத்தினை மேம்படுத்தல்
- படகு நிர்மாணத் துறை அபிவிருத்தி
- உற்பத்திப் பொருட்கள் மற்றும் முறைமைச் சான்றுப் படுத்தலுக்கும், பெறுமதி சேர்க்கப்பட்ட உற்பத்திப் பொருட்களுக்கான சிறந்த தயாரிப்பு முறைகளுக்குமான உதவித் திட்டம்
- ஏற்றுமதியை அடிப்படையாகக் கொண்ட சேதன விவசாய உற்பத்திப் பொருட்களின் அபிவிருத்தி
- தென்னை நார் மற்றும் கொக்கோ சிதைவுகளின் உற்பத்திப் பொருட்களின் அபிவிருத்தி
- INFOFISH – CFC நன்னீர் மீன் வளர்ப்புக் கருத்திட்டத்தினை நடைமுறைப்படுத்தல்.
- தேசிய சேதன கட்டுப்பாட்டு அலகின் [NOCU] ஊடாக சேதன சான்றுப்படுத்தலுக்கான செலவைக் குறைப்பதற்கு ஏற்றுமதியாளர்களுக்கு வசதியளித்தல்.
- ஆடைத் துறைக்கான பிரதிபிம்பத்தினை கட்டியெழுப்பும் நிகழ்ச்சித் திட்டம்
- இலங்கையின் ஆடைத் துறையின் திறன்களைக் காட்சிப்படுத்துவதற்கான இலங்கையின் வடிவமைப்பு விழாவை ஏற்பாடு செய்தல்.
- சர்வதேச சந்தைகளில் இலங்கையின் இறப்பரை அடிப்படையாகக் கொண்ட உற்பத்திப் பொருட்களை மீள நிலைப்படுத்தல்.
- விஷேடமாக "சிலோன் நீல சபாயா'' வினை ஊக்குவிப்பதற்கான விளம்பர /பிரதிபிம்பத்தினை கட்டியெழுப்பும் நிகழ்ச்சித் திட்டம்
- மட்பாண்டக் கைத்தொழிலின் போட்டித் தன்மையை அதிகரிப்பதற்கான உற்பத்தித் திறன் மேம்பாட்டு நிகழ்ச்சித் திட்டம்
- ஏற்றுமதிகளுக்கான கூரை ஓட்டுக் கைத்தொழிலின் அபிவிருத்தி
- பெறுமதி சேர்க்கப்பட்ட கனிய வள உற்பத்திப் பொருட்களை ஏற்றுமதி செய்வதற்கு ஏற்றுமதியாளர்களுக்கு உதவுதல்.
- இரும்புருக்குக் கைத்தொழிலுக்கான தொழில்நுட்ப நிகழ்ச்சித் திட்டம்

- உற்பத்திப் பொருட்கள் / சந்தைகளின் போக்குகள் தொடர்பாக சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில் முயற்சிகளில் கைத்தறி ஏற்றுமதியாளர்களின் அறிவை மேம்படுத்தவும், விருத்தி செய்வதற்குமான நிகழ்ச்சித் திட்டம்
- நியாயமான வர்த்தக தர நியமங்களின் ஊடாக பரிசுப் பொருட்களின் உற்பத்திகளின் அபிவிருத்தி
- உபாய ரீதியான தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக இலங்கையில் 2013/ 14 தகவல் தொடர்பாடல் தொலைத் தொடர்பு (ICT)/ வர்த்தக செயன்முறைச் செயற்பாடுகளின் மூலங்களை இனங்காணும் மாநாடு
- தகவல் தொடர்பாடல் தொலைத் தொடர்பு ( ICT )/ வர்த்தக செயன்முறைச் செயற்பாடு (BPO) ஏற்றுமதியாளர்களுக்கான தகவல் தொடர்பாடல் தொலைத் தொடர்புக் கைத்தொழில் மற்றும் தொலைத் தொடர்புக் கம்பனிகளுக்கிடையில் ஊடாடும் மாநாடுகளை ஏற்பாடு செய்தல்.
- தகவல் தொடர்பாடல் தொலைத் தொடர்பு (ICT) கைத்தொழில் / வர்த்தகச் செயன்முறைச் செயற்பாடு (BPO) ஏற்றுமதியாளர்களின் இயலளவுகளை விருத்தி செய்வதற்கான பல்கலைக்கழக மேம்பாடுகள் மற்றும் ஆராய்ச்சிகளின் ஊடாக உலகளாவிய சந்தைகளில் "இலங்கையின் தகவல் தொடர்பாடல் தொலைத் தொடர்பு (ICT )/ வர்த்தக செயன்முறைச் செயற்பாடு (BPO) " கைத்தொழிலின் மேம்பாடும் வர்த்தக இலச்சினையிடலும்
- பொருட்களைக் களஞ்சியப் படுத்திவைக்கும் வர்த்தகம், நிர்மாணம், சுகாதாரம், ஆயுர்வேதம் போன்ற சேவைகள் துறைக்கான அபிவிருத்தி
- வர்த்தக இலச்சினைகளின் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்கள் உதாரணம் அன்னாசி போன்றன
- இலத்திரனியல் துறைக்கான இலங்கை வழங்குனர்களுக்கான தர விருத்தி நிகழ்ச்சித் திட்டங்கள்
- விவசாயம், கைத்தொழில், மற்றும் கடற்றொழில் துறைகளை மேம்படுத்தவதற்கான தர நியமங்களின் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்கள்
- வாசனைத் திரவியங்கள் துறைக்கான அபிவிருத்தி மேம்பாட்டு நிகழ்ச்சித் திட்டங்கள்
- அச்சிடல் துறைக்கான தொழில்நுட்ப அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்கள்
- படகுக் கைத்தொழிலுக்கான உற்பத்தித் திறன் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்கள்
- ஏற்றுமதிக்குத் தயாரான சிறிய மற்றும் நடுத்தர பரிசுப் பொருட்களின் தயாரிப்பாளர்களின் அபிவிருத்தி
- காலணிக் கைத்தொழிலுக்கான தொழில்நுட்ப அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம்
- சகல உற்பத்தித் துறைகளின் பொருட்கள் மற்றும் சந்தைகளுக்கான அறிவூட்டல் / செயலமர்வு நிகழ்ச்சித் திட்டங்களை ஏற்பாடு செய்தல்.
- ஆலோசனைக் குழுக் கூட்டங்களின் ஊடாக அரச – தனியார் பங்கேற்பு

**<u>பிராந்திய ஏற்றுமதி அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்கள்</u>**

- விவசாய ஏற்றுமதி வலயங்களின் தொடர்ச்சி
- நார் கைத்தொழிலுக்கான நிலையான வலு முகாமைத்துவ நிகழ்ச்சித் திட்டம் [வட மாகாணம்]
- மாகாணங்களிலுள்ள வெட்டிய மலர்கள் மற்றும் மற்றும் செடிகளின் அபிவிருத்திக் கருத்திட்டம்
- வட மாகாணத்தில் பச்சை மிளகாய் மற்றும் மஞ்சள் பயிர்ச்செய்கையினை ஏற்பாடு செய்தல்
- மத்திய மாகாணத்தில் அலங்கார மீன் இணைப்பு நிகழ்ச்சித் திட்டம்

- வட மேல் மாகாணத்தில் ஏற்றுமதிகளுக்கான காய்கறிகள், வாசனைத் திரவியங்களின் நிரம்பல் அபிவிருத்திக் கருத்திட்டம்
- தென் மாகாணத்தில் கறுவா பதப்படுத்தும் தொழிற்சாலைகள் வாசனை எண்ணெய் நிலையத்திற்கு தரச் சான்றுப்படுத்தலைப் பெற்றுக் கொள்வதற்கு உதவுதல்.
- மட்டக்களப்பு மாவட்டத்தில் ஏற்றுமதிக்கான அன்னாசிப் பயிர்ச் செய்கை மற்றும் அம்பாறை மாவட்டத்தில் அன்னாசி நாற்றுப் பண்ணைகள் தொடர்பான முன்னோடிக் கருத்திட்டம்
- தேயிலைத் தயாரிப்பாளர்கள் / ஏற்றுமதியாளர்கள், கைத்தொழிலாளர்கள் போன்றோருக்கான தரப்படுத்தல் பரப்பு இயலளவு அபிவிருத்திக்கான உதவித் திட்டம்
- தேயிலைத் துறைக்கான திட்ட / உற்பத்திப் பொருட்களுக்கான சான்றுப்படுத்தலுக்கான உதவித் திட்டம்
- வர்த்தக இலச்சினைப் பெயர்கள், வர்த்தகச் சின்னங்கள் மற்றும் வர்த்தகக் குறிகளின் அபிவிருத்திக்கான உதவித் திட்டம்

**சந்தை அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்கள்**

- தெரிவு செய்யப்பட்ட முன்னுரிமை பெற்ற மற்றும் புதிதாக எழுச்சி பெற்று வரும் சந்தைகளில் சர்வதேச வர்த்தகக் கண்காட்சிகளில் இலங்கையின் பங்கேற்பினை ஏற்பாடு செய்தல்.
- சந்தைப் பன்முகப்படுத்தல் நிகழ்ச்சித் திட்டங்களை நடைமுறைப்படுத்தல் (ரஷ்யாவுக்கு மீன், ஜப்பானிற்கு ஆடை, ஜப்பான், மத்திய கிழக்கு மற்றும் ஆபிரிக்க நாடுகளுக்கான மென்பொருட்கள், இந்தியாவுக்கு இறப்பர் தன்னியக்க உற்பத்திப் பொருட்கள், கொரியாவுக்கு இறப்பர் உற்பத்திப் பொருட்கள், மியன்மாருக்கு நிர்மாணச் சேவைகள், மாலைதீவுக்கு கல்விச் சேவைகள், ஐரோப்பாவுக்கு சுகாதாரச் சேவைகள் போன்றன).
- ஆடை மற்றும் ஏனைய உற்பத்திப் பொருட்களுக்கு பிரேசில் போன்ற புதிய சந்தைகளை ஆராய்வதற்கு அனுபவ வெளிப்பாட்டு நிகழ்ச்சித் திட்டங்களை ஏற்பாடு செய்தல்.
- தெரிவு செய்யப்பட்ட சந்தைகளில் உள்வாரியானதும், வெளிவாரியானதுமான வர்த்தகத் தூதுக் குழுக்களை ஏற்பாடு செய்தல்.
- இலங்கையில் ஏற்றுமதித் துறை தொடர்பான பிரதிபிம்பத்தைக் கட்டியெழுப்புவதற்கு பொருத்தமான சந்தைத் தொடர்பாடல் உபாயமொன்றினை நடைமுறைப்படுத்தல்.
- எமது உற்பத்திப் பொருட்களையும், மற்றும் சேவைகளையும் மேம்படுத்துவதற்கு வெளிநாட்டிலுள்ள வர்த்தக இணைப்பாளருடன் மிக நெருக்கமான ஒருங்கிணைப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.
- சந்தை ஆராய்ச்சி / அளவைகள் ஆகியனவற்றை மேற்கொள்ளல்
- ‘பேசட்ஸ்’ , ‘ஆயுர்வேத’, ‘ப்ரோ புட்ஸ்’ போன்ற உள்ளூர் வர்த்தகக் கண்காட்சிகளில் ஏற்றமதியாளர்களின் பங்கேற்பினை ஏற்பாடு செய்தல்.
- உள்ளூர் வர்த்தகக் கண்காட்சிகளை ஏற்பாடு செய்தல்.
- உள்ளூர் வர்த்தகக் கண்காட்சிகளில் ஏற்றுமதியாளர்களின் பங்கேற்பினை எறற்பாடு செய்தல்.
- IFEAT, ATPF, ICA Congress போன்ற சர்வதேச மாநாடுகளையும், கருத்தரங்குகளையும் இலங்கையில் எற்பாடு செய்தல்.
- காலணி மற்றும் தோல் உற்பத்திப் பொருட்களின் கண்காட்சிகளை ஏற்பாடு செய்தல்.

**ஏனைய நிகழ்ச்சித் திட்டங்கள்**

- ஏற்றுமதிகளுக்கான பொதிகளின் அபிவிருத்தி
- வர்த்தகத் தகவல்கள், சந்தைப் புலனாய்வு, இலத்திரனியல் வர்த்தக சேவைகள், ஏற்றமதியுடன் தொடர்புடைய வெளியீடுகள் போன்றனவற்றை வழங்குதல்.
- ஏற்றுமதியாளர்கள் முகங்கொடுக்கும் பிரச்சினைகளைத் தீர்த்து வைத்தல் (ஏற்றுமதியாளர் பேரவை).
- இறக்குமதி / ஏற்றுமதிச் செயன்முறைகள், ஏற்றுமதிப் பொதியிடல், தொடர்பான பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களை நடாத்துதல்.
- ஏற்றுமதியுடன் தொடர்புடைய விடயங்கள், திறன்கள் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்கள், தொழில்முயற்சிகள் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம் ஆகியன தொடர்பான அறிவூட்டல் நிகழ்ச்சித் திட்டங்களை நடாத்துதல்.

**இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச்சபை**

**31.12.2014 ல் உள்ள நிதி**

**நிலைமையின் அறிக்கை**

| | குறிப்பு | SLFRS 31.12.2014 ரூபா. சதம் | SLFRS 31.12.2013 ரூபா. சதம் |
|---|---|---|---|
| **சொத்துக்கள்** | | | |
| நடைமுறையல்லாச் சொத்துக்கள் | | | |
| ஆதணி, இயந்திர, உபகரணங்கள் தேறிய | (9) | 64,144,109.91 | 69,164,698.78 |
| இணை முதலீடு - நிரற்படுத்தப்படாத | (10) | 888,590,808.00 | 805,459,768.00 |
| ஏனைய நடைமுறையல்லா நிதிச் சொத்துக்கள் | (11) | 40,548,150.00 | 40,548,150.00 |
| | | 993,283,067.91 | 915,172,616.78 |
| **நடைமுறைச் சொத்துக்கள்** | | | |
| இருப்புகள் | (12) | 1,318,144.08 | 1,330,321.91 |
| நடைமுறையல்லா சொத்தின் விற்பனை | | - | - |
| வியாபார மற்றும் ஏனைய வருமதிகள் | (13) | 148,466,803.11 | 150,237,754.18 |
| முற்பணம் மற்றும் முற்கொடுப்பனவுகள் | (14) | 51,334,602.58 | 40,694,347.10 |
| காசு மற்றும் காசுக்குச் சமமானவைகள் | (15) | 37,597,978.87 | 16,852,165.84 |
| | | 238,717,528.64 | 209,114,589.03 |
| **மொத்தச் சொத்துக்கள்** | | **1,232,000,596.55** | **1,124,287,205.81** |
| உரிமையாண்மை மற்றும் பொறுப்புக்கள் | | | |
| மூலதனம் மற்றும் ஒதுக்கங்கள் | | | |
| கிடைக்கப்பெற்ற மாணிங்கள் | (16) | 19,362,941.48 | 20,706,020.21 |
| செலவினத்திற்கு மேலதிகமான திரண்ட வருமானம் | | 1,026,271,483.80 | 920,619,619.11 |
| மொத்த உரிமையாண்மை | | 1,045,634,425.28 | 941,325,639.32 |
| **நடைமுறையல்லா பொறுப்புக்கள்** | | | |
| ஏற்பாடு மற்றும் ஏனைய பொறுப்புக்கள் | (17) | 26,525,183.86 | 22,089,408.88 |
| ஓய்வூதியக் கொடுப்பனவுக் கடப்பாடு | (18) | 84,374,275.25 | 79,955,076.27 |
| | | 110,899,459.11 | 102,044,485.15 |
| ஏனைய கொடுக்க வேண்டியவை | (19) | 63,230,456.75 | 63,768,000.39 |
| வங்கி மேலதிகப் பற்று | (20) | 12,236,255.41 | 17,149,080.95 |
| | | 75,466,712.16 | 80,917,081.34 |
| **மொத்த உரிமையாண்மை மற்றும் பொறுப்புக்கள்** | | **1,232,000,596.55** | **1,124,287,205.81** |

நிதி அறிக்கையைத் தயாரித்தலும் மற்றும் காட்சிப்படுத்தலும் சபைப் பணிப்பாளர்களுக்குரிய பொறுப்பாகும். பணிப்பாளர் சபை சரியாக ஒப்பம் இடப்பட்டுள்ளது.

| | | |
|---|---|---|
| ………………………………….. | ………………………………. | ……………………... |
| இந்திரா மல்வத்த | கலாநிதி யூசுப் கே மரிக்கார் | பி.கே. சுமித்ராராச்சி |
| தலைவியும் பிரதான நிறைவேற்று அதிகாரியும | நிறைவேற்றுப் பணிப்பாளர் | பணிப்பாளர் / நிதி |

**இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச்சபை**

**31.12.2014 ல் முடிவடைந்த வருடத்திற்குரிய வருமானக்கூற்று அறிக்கை**

| | குறிப்பு | **SLFRS 31.12.2014** ரூபா. சதம் | **SLFRS 31.12.2013** ரூபா. சதம் |
|---|---|---|---|
| **வருமானம்** | | | |
| வருமானம் | (3) | 607,956,169.40 | 558,606,933.51 |
| ஏனைய வருமானம் | (4) | 132,410,214.45 | 98,471,989.91 |
| மொத்த வருமானம் | | 740,366,383.85 | 657,078,923.42 |
| **செலவினம்** | | | |
| ஏற்றுமதி அபிவிருத்திச் செலவுகள் | (5) | (300,282,286.93) | (234,406,882.33) |
| நிர்வாகச் செலவுகள் | (6) | (332,116,077.42) | (320,671,883.37) |
| செயற்பாட்டு நடவடிக்கைகளுக்கான செலவிலிருந்து பெறப்பட்ட வருமானம் | | 107,968,019.50 | 102,000,157.72 |
| நிதிக்கிரயம் | (7) | (2,216,154.81) | (1,485,313.55) |
| சாதாரண நடவடிக்கைகளுக்கான செலவிலிருந்து பெறப்பட்ட மிகை வருமானம் | | 105,751,864.69 | 100,514,844.17 |
| **ஏனைய வருமானக் கூற்று வருமானம்** | | | |
| - ஆதனம், இயந்திரம், மற்றும் உபகரணத்தின் மீள் மதிப்பீட்டு இலாபம் | (8) | (100,000.00) | - |
| - தீர்மானிக்கப்பட்ட அநுகூலத் திட்டத்தின் இலாபம் / நட்டம் | | - | - |
| - வெளிநாட்டு செயற்பாட்டின் மூலம் நிதி அறிக்கையை மொழிப் பெயர்க்கும் இலாபம்/ நட்டம் | | - | - |
| - விற்பனைக்குத் தயாரான நிதியியல் சொத்துக்களின் இலாபம் / நட்டம் | | - | - |
| இந்த வருடத்திற்குரிய ஏனைய வருமானக்கூற்று வருமானம் | | (100,000.00) | - |
| **இந்த வருடத்திற்குரிய மொத்த வருமானக்கூற்று வருமானம்** | | **105,651,864.69** | **100,514,844.17** |

**<u>இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச்சபை</u>**
**31.12.2014ல் முடிவடைந்த ஆண்டுக்கான**
**<u>காசுப்பாய்ச்சல் அறிக்கை</u>**

| | **2014** |
|---|---|
| | **ரூபா. சதம்** |
| **செயற்பாட்டு நடவடிக்கையிலான காசுப் பாய்ச்சல் (பாவனையில்)** | |
| சாதாரண நடவடிக்கைகளுக்கான செலவிலிருந்து பெறப்பட்ட மிகை வருமானம் | 105,651,865 |
| **<u>சீராக்கங்கள்</u>** | |
| பெறுமானத் தேய்வு | 10,283,639 |
| முதலீட்டு வருமானம் | (123,308,069) |
| ஆதன, இயந்திர உபகரணங்களின் விற்பனை (இலாபம்)/நட்டம் | (1,967,736) |
| மறுமதிப்பீட்டில் இழப்பு | 100,000 |
| நிதிக் கிரயம் | 359,624 |
| அரச மானியங்களின் குறைப்பு | (1,343,079) |
| ஓய்வுகால உபகாரப் பணத்திற்கான ஒதுக்கீடு | 13,496,607 |
| முதலீடுகளின் ஒதுக்கத்தின் மாற்றங்கள் | - |
| **தொழிற்பாட்டு மூலதன மாற்றத்திற்கு முன்னரான செயற்பாட்டு இரலாபம் (நட்டம்)** | **3,272,851** |
| இருப்புக்களின் அதிகரிப்பு / (குறைவு) | 12,178 |
| வியாபார மற்றும் ஏனைய வருமதிகளின் அதிகரிப்பு / (குறைவு) | 1,770,951 |
| முற்பணம் மற்றும் முற்பணக் கொடுப்பனவுகளின் (அதிகரிப்பு) / குறைவு | (10,640,255) |
| ஏனைய பொறுப்புகள் மற்றும் ஒதுக்கங்கள் (அதிகரிப்பு) / குறைவு | 4,435,775 |
| இதர கொடுப்பனவுகளின் (அதிகரிப்பு) / குறைவு | (537,544) |
| செயற்பாட்டின் மூலம் உருவாகிய பணம் | **(1,686,045)** |
| செலுத்திய நிதிக் கிரயம் | (359,624) |
| செலுத்திய திட்டமிட்ட அனுகூலச் செலவு | (9,077,408) |
| செயற்பாட்டு நடவடிக்கையின் மூலம் தேறிய பணம் | **(11,123,076)** |
| **முதலீட்டு செயற்பாடுகளின் காசுப்பாய்ச்சல் கூற்று (பாவனையில்)** | |
| ஆதன, இயந்திர, உபகரணங்களின் உரிமை | (6,808,384) |
| ஆதனம், இயந்திரம் மற்றும் உபகரணம் போன்றவற்றின் விற்பனை வருமானம் | 3,413,069 |
| கூட்டிணைப்பு பங்கு முதலீட்டு மூலம் பெறப்பட்ட வருமானம் | 83,131,040 |
| கிடைக்கப்பெற்ற பங்கு இலாபம் | 37,965,315 |
| கிடைக்கப்பெற்ற வட்டி | 2,211,715 |
| முதலீட்டு நடவடிக்கையின் மூலம் தேறிய காசுப்பாய்ச்சல் (பாவனையில்) | **119,912,754** |
| **நிதி நடவடிக்கையின் மூலம் தேறிய காசுப் பாய்ச்சல் (பாவனையில்)** | |
| பங்கு முதலீடு | (83,131,040) |
| முதலீடுகளின் மீட்டல் | - |
| நிதி நடவடிக்கையின் மூலம் தேறிய காசுப்பாய்ச்சல் (பாவனையில்) | **(83,131,040)** |
| காசு மற்றும் காசுக்குச் சமமானவைகளின் தேறிய அதிகரிப்பு / குறைவு | **25,658,639** |
| வருட ஆரம்பத்தில் உள்ள காசு மற்றும் காசுக்குச் சமமானவைகள் | **(296,915)** |
| வருட இறுதியில் உள்ள காசு மற்றும் காசுக்குச் சமமானவைகள் | **25,361,724** |
| **காசு மற்றும் காசுக்குச் சமமானவைகளின் பகுப்பாய்வு** | |
| வங்கியிலுள்ள காசு | 37,597,979 |
| கையிலுள்ள காசு | (12,236,255) |
| | **25,361,724** |

**இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச்சபை**
**31.12.2014ல் முடிவடைந்த ஆண்டுக்கான**
**<u>உரிமையாண்மை மாற்றங்களின் அறிக்கை</u>**

| | | அரச மானியங்கள் | திரண்ட இலாபம் | மொத்தம் |
|---|---|---|---|---|
| 01.01.2013ல் மீதி | | 22,049,098.94 | 401,627,915.94 | 423,677,014.88 |
| சாதாரண நடவடிக்கைகளுக்கான செலவிலிருந்து பெறப்பட்ட மிகை வருமானம் | | - | 100,514,844.17 | 100,514,844.17 |
| அரச மானியத்தின் சேர்க்கை | | (1,343,078.73) | - | (1,343,078.73) |
| முன்னைய வருட சீராக்கங்கள் | **(21)** | - | 418,476,859.00 | 418,476,859.00 |
| 31.12.2013ல் மீதி | | 20,706,020.21 | 920,619,619.11 | 941,325,639.32 |
| சாதாரண நடவடிக்கைகளுக்கான செலவிலிருந்து பெறப்பட்ட மிகை வருமானம் | | - | 105,651,864.69 | 105,651,864.69 |
| அரச மானியத்தின் சேர்க்கை | | (1,343,078.73) | - | (1,343,078.73) |
| **31.12.2014ல் மீதி** | | **19,362,941.48** | **1,026,271,483.80** | **1,045,634,425.28** |

**இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபை**

**31.12.2014ல் முடிவடைந்த நிதி அறிக்கையின் குறிப்புகள்**

| | SLFRS 31.12.2014 ரூபா. சதம் | SLFRS 31.12.2013 ரூபா. சதம் |
|---|---|---|
| **(3) வருமானம்** | | |
| கிடைக்கப்பெற்ற மானியம் | 518,000,000.00 | 483,950,000.00 |
| ஏற்றுமதிச் சேவைகள் மூலம் பெற்ற வருமானம் | 68,596,668.00 | 43,609,547.97 |
| ஊர்ழுபுஆ 2013 | 9,120,000.00 | 19,692,435.47 |
| கிளைகளின் (பிரிவு) வருமானம் | 27,134.75 | 38,514.62 |
| இணைய (இன்டர்நெட்) வருமானம் | 367,859.00 | 303,609.00 |
| இணைய போர்டல் | 316,195.56 | 110,195.32 |
| எக்ஸ்போ - 2012ன் வருமானம் | 1,000,000.00 | 1,504,176.28 |
| கருத்தரங்குகள் மற்றும் பாடநெறிக் கட்டணம் | 2,770,242.00 | 1,875,350.00 |
| தோல் கண்காட்சி கூடம் மூலம் கிடைத்த வருமானம் 2014 | 6,543,145.09 | 7,221,848.85 |
| புத்தகங்கள் விற்பனை | 309,425.00 | 232,856.00 |
| ஏனைய வருமானம் | 905,500.00 | 68,400.00 |
| | **607,956,169.40** | **558,606,933.51** |

**(4) ஏனைய வருமானம்**

| | | |
|---|---|---|
| வட்டி வருமானம் | 2,211,714.68 | 1,970,363.53 |
| இணைக் கம்பனி வருமானப் பங்கு | 83,131,040.00 | 47,862,116.00 |
| பங்கு இலாப வருமானம் | 37,965,314.57 | 36,415,076.22 |
| நிலையான சொத்தின் விற்பனையிலிருந்தான இலாபம் | 1,967,735.68 | - |
| ஏனைய சில்லரை வருமானம் | 1,045,364.07 | 4,533,445.38 |
| அரச தேய்மானம் | 1,343,078.73 | 1,343,078.73 |
| பெற்ற வட்டி வருமானம் (ஐகுசுளு) | 4,745,966.72 | 6,007,785.90 |
| பறிமாற்ற வித்தியாசங்கள் | - | 340,124.15 |
| | **132,410,214.45** | **98,471,989.91** |

**(5) ஏற்றுமதி அபிவிருத்திச் செலவுகள்**

| | | |
|---|---|---|
| ஏற்றுமதி அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள் | 80,298,367.71 | 78,062,093.57 |
| ஈயு இலங்கை இயல்பு கருத்திட்டம் | 570,611.09 | 1,503,150.41 |
| ஈபோட் சந்தைப்படுத்தலை மேம்படுத்தல் | 92,264,081.98 | 59,412,217.82 |
| ஊர்ழுபுஆ 2014 | 82,405,173.94 | 34,270,326.12 |
| வர்த்தக தூதுக்குழுவின் பங்கேற்பு | 531,303.11 | 971,371.20 |
| உள்ளுர் வர்த்தகச் சந்தைகள் | 2,181,155.30 | 341,208.60 |
| கொள்கை மற்றும் திட்டமிடல் செலவுகள் | 977,162.38 | 2,174,154.74 |
| ஏற்றுமதி சந்தை மேம்படுத்தல் | 9,424,470.21 | 28,192,265.75 |
| சேவைப் பிரிவுச் செலவுகள் | - | 1,591,713.77 |
| பிராந்திய அபிவிருத்திச் செலவுகள் | 19,026,572.10 | 22,153,559.34 |

| | | |
|---|---|---|
| வர்த்தக தகவல்கள் மற்றும் சேவைச் செலவுகள் | 7,639,200.33 | 4,547,663.00 |
| வர்த்தக வலைச் செலவுகள் | 3,404,465.89 | 949,206.61 |
| இணைந்த விவசாய மாதிரிப் பண்ணைச் செயற்திட்டம் | 2,680.00 | 10,019.00 |
| கைத்தொழில் பொருட்களுக்கான தரச் சான்றிதழ் | - | 227,932.40 |
| இலங்கை கறுவா குறீயீடு வடிவமைபு | 1,557,042.89 | - |
| ர்யுஊஊஉீ நிகழ்ச்சித்திட்டம | - | - |
| | **300,282,286.93** | **234,406,882.33** |

## (6) நிர்வாகச் செலவுகள்

| | | |
|---|---|---|
| சம்பளம் மற்றும் கூலிகள் | 109,968,561.74 | 107,091,001.93 |
| மேலதிக நேரம் மற்றும் விடுமுறைக் கொடுப்பனவு | 8,328,658.36 | 8,653,737.90 |
| மிகை ஊதியம் (போனஸ்) | 2,687,512.50 | 2,010,474.16 |
| ஊழியர் சேமலாப நிதி | 12,958,600.38 | 12,941,816.19 |
| ஊழியர் நம்பிக்கை நிதி | 2,545,187.66 | 2,659,201.49 |
| ஓய்வூதியம் | 34,000.00 | - |
| பணிக்கொடை | 13,496,606.73 | 9,703,139.95 |
| உத்தியோகத்தர் நலன்புரி | 20,355,505.15 | 33,523,646.31 |
| ஆட்சேர்த்தல் கட்டணங்கள் | 262,569.43 | 41,050.80 |
| உத்தியோகத்தர் செலவு (ஐகுசுளு சீராக்கம்) | 4,745,966.72 | 6,007,785.90 |
| மின்சாரம் | 22,471,618.02 | 21,332,198.95 |
| நீர் | 789,544.24 | 664,796.13 |
| சட்ட மற்றும் வேறு தொழில்சார் கட்டணம் | 66,874.40 | 710,512.00 |
| விளம்பரம் | 489,776.00 | 646,640.00 |
| பாதுகாப்பு | 4,236,270.54 | 3,729,341.14 |
| கணக்காய்வுக் கட்டணம் | 1,039,239.00 | 600,000.00 |
| அச்சிடல் கட்டணம் | 956,654.80 | 2,416,842.72 |
| போக்குவரத்து மற்றும் பிரயாணக் கட்டணம் | 15,705,709.54 | 1,086,696.00 |
| விருந்தோம்பல் | 254,383.60 | 351,401.20 |
| ஏனைய பொதுச் செலவுகள் | 1,682,354.10 | 1,086,174.39 |
| சபை அங்கத்தவர்கள் கட்டணம். | 571,270.00 | 467,376.00 |
| அலுவலக உபகரணங்களின் பராமரிப்பு | 971,931.65 | 1,270,581.01 |
| வாடகை | 63,500,001.60 | 59,938,710.41 |
| எரிபொருள் மற்றும் உராய்வு நீக்கிள் | 8,397,404.96 | 9,100,544.98 |
| வாகனங்களின் பழுதுபார்த்தல் மற்றும் பராமரிப்பு | 6,653,826.76 | 5,093,439.67 |
| தனியார் வாடகைக் கட்டணம் | 5,739,629.40 | 5,596,328.92 |
| தொடர்பாடல் மற்றும் சந்தாப்பணம் | 8,216,618.66 | 7,906,128.08 |
| பெறுமானத் தேய்வு | 10,283,639.34 | 10,059,460.91 |
| உள்ளுர் வியாபாரம் | 338,961.40 | 653,335.18 |
| கேள்வி மனுவை வழங்கல் | 3,912,601.53 | 3,557,672.67 |
| நிலையான சொத்துக்களில் விற்பனையால் ஏற்பட்ட நட்டம் | - | 1,199,008.83 |
| நாணயமாற்று நட்டம் | 408,458.96 | 572,839.55 |
| பரிமாற்ற நட்டம் | 46,140.25 | - |
| | **332,116,077.42** | **320,671,883.37** |

## (7) நிதிக் கிரயம்

| | | |
|---|---|---|
| வட்டிச் செலவுகள் | 359,623.59 | 354,736.88 |
| முத்திரைக் கட்டணம் | 971,611.00 | 71,905.40 |
| நிதிக் கட்டணம் | 884,920.22 | 1,058,671.27 |
| | **2,216,154.81** | **1,485,313.55** |

## (8) மோட்டார் வாகனங்களை மீள்மதிப்பீடு செய்தல்

31.12.2012ல் இலங்கை மோட்டார் வண்டிச் சங்கம் இச்சபைக்குச் சொந்தமான மோட்டார் வாகனங்களை மீள்மதிப்பீடு செய்தது. இந்தச்சபை ஒவ்வொரு ஐந்து வருடங்களுக்கு ஒரு தடவை மோட்டார் வாகனங்களை மீள் மதிப்பீடு செய்ய எதிர்பார்க்கின்றது.

## இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபை

## 31.12.2014ல் முடிவடைந்த நிதி அறிக்கையின் குறிப்புகள்

### (9) ஆதன, இயந்திர மற்றும் உபகரணங்கள்

### (9.1) கிரயம்

| சொத்துக்கள் | மீதி 01/01/2014 | மேலதிகம் | மீள் மதிப்பீடு | வைப்புக்கள் | மீதி 31/12/2014 |
|---|---|---|---|---|---|
| குடியிருப்புக்குரிய தொலைபேசி | 99,364.00 | - | - | - | 99,364.00 |
| மோட்டார் வாகனம் | 51,600,000.00 | 1,950,000.00 | (100,000.00) | 3,900,000.00 | 49,550,000.00 |
| குணனி | 28,992,255.02 | 2,948,958.00 | - | - | 31,941,213.02 |
| கணனி மென்பொருள் | 2,232,651.50 | 1,933,299.50 | - | 20,670.00 | 4,145,281.00 |
| கணனி உபகரணங்கள் | 463,206.31 | 517,261.01 | - | - | 980,467.32 |
| தொலைக்காட்சி உபகரணங்கள் | 4,730,855.01 | - | - | - | 4,730,855.01 |
| PABX உபகரணங்கள் | 65,549.00 | - | - | - | 65,549.00 |
| தொலைபேசி இணைப்பை ஏற்படுத்தல் | 1,481,640.14 | 13,750.00 | - | - | 1,495,390.14 |
| தளபாடம் மற்றும் அலுவலக உபகரணங்கள். | 28,827,844.25 | 1,415,785.28 | - | - | 30,243,629.53 |
| | **118,493,365.23** | **8,779,053.79** | **(100,000.00)** | **3,920,670.00** | **123,251,749.02** |

### (9.2) பெறுமானத்தேய்வு

| பெறுமானத்தேய்வு | மீதி 01/01/2014 | வருடத்திற்கான கட்டணம் | விற்பனைக்குரிய பெறுமானத்தேய்வு | மீதி 31/12/2014 |
|---|---|---|---|---|
| குடியிருப்புக்குரிய தொலைபேசி | 61,245.78 | 7,121.64 | - | 68,367.42 |
| மோட்டார் வாகனம் | 6,065,000.00 | 5,789,666.67 | (504,666.68) | 11,349,999.99 |
| குணனி | 21,937,155.34 | 2,408,943.24 | - | 24,346,098.58 |
| கணனி மென்பொருள் | 1,740,157.85 | 238,126.92 | - | 1,978,284.77 |
| கணனி உபகரணங்கள் | 235,966.09 | 105,933.18 | - | 341,899.27 |
| தொலைக்காட்சி உபகரணங்கள் | 3,080,823.45 | 222,112.11 | - | 3,302,935.56 |
| PABX உபகரணங்கள் | 26,842.97 | 3,870.60 | - | 30,713.57 |
| தொலைபேசி இணைப்பை ஏற்படுத்தல் | 1,263,509.25 | 77,614.76 | - | 1,341,124.01 |
| தளபாடம் மற்றும் அலுவலக உபகரணங்கள். | 14,917,965.72 | 1,430,250.22 | - | 16,348,215.94 |
| | **49,328,666.45** | **10,283,639.34** | **(504,666.68)** | **59,107,639.11** |

| *குறைக்கப்பட்ட பெறுமதி* | 2014 | 2013 |
|---|---|---|
| திரயம் | 123,251,749.02 | 118,493,365.23 |
| திரண்ட பெறுமானத் தேய்வு | (59,107,639.11) | (49,328,666.45) |
| குறைக்கப்பட்ட பெறுமதி | **64,144,109.91** | **69,164,698.78** |

**இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபை**

**31.12.2014ல் முடிவடைந்த நிதி அறிக்கையின் குறிப்புகள்**

| | SLFRS 31.12.2014 | SLFRS 31.12.2013 |
|---|---|---|
| | ரூபா சதம் | ரூபா சதம் |
| **(10) இணை முதலீடு நிரற்படுத்தப்படாத** | | |
| இணைக்கம்பனிகளில் முதலீடு - னுரீடு | 888,590,808.00 | 805,459,768.00 |
| | **888,590,808.00** | **805,459,768.00** |
| **(11) ஏனைய நடைமுறையல்லா நிதிச் சொத்துக்கள்** | | |
| மீட்கத்தக்க முன்னுரிமைப் பங்குகள் | 105,058,083.78 | 105,058,083.78 |
| சாதாரண பங்குகள் | 58,312,483.62 | 58,312,483.62 |
| (-) மதிப்பு சேத ஏற்பாடு | (122,822,417.40) | (122,822,417.40) |
| | **40,548,150.00** | **40,548,150.00** |
| **(12) இருப்புகள்** | | |
| காகிதாதிகள் | 1,318,144.08 | 1,319,721.91 |
| டயர் மற்றும் டியூப் | - | 10,600.00 |
| | **1,318,144.08** | **1,330,321.91** |
| **(13) வியாபார மற்றும் ஏனைய கிடைக்க வேண்டியவைகள்** | | |
| ஏற்றுமதியாளருக்குரிய கடன் | 46,391,543.87 | 46,413,543.87 |
| (-) கடன்களின் சேத ஏற்பாடு | (45,477,591.40) | (45,477,591.40) |
| உத்தியோகத்தர் கடன்கள் | 43,867,269.13 | 47,487,670.34 |
| குறை : ஒத்திவைக்கப்பட்ட உத்தியோகத்தர் செலவு | (14,704,943.13) | (16,060,711.67) |
| வெட் (ஏயவ) பெறத்தக்க | 104,676,878.80 | 104,676,878.80 |
| ஏனைய கடன்பட்டோர் | 13,713,645.84 | 13,197,964.24 |
| | **148,466,803.11** | **150,237,754.18** |
| **(14) முற்பணம் மற்றும் முற்கொடுப்பனவுகள்** | | |
| முற்கொடுப்பனவுகள் | 18,360,928.24 | 15,195,600.35 |
| முற்பணங்கள் | 15,981,790.75 | 7,151,094.62 |
| வங்கி உத்தரவாதம் | 300,000.00 | 300,000.00 |
| சேவைக்கான வைப்புகள் | 1,002,550.30 | 1,002,550.30 |
| மீளளிக்கக்கூடிய பாதுகாப்பு வைப்புகள் | 969,390.16 | 969,390.16 |

| | | |
|---|---|---|
| இரத்தாக்கப்பட்ட காசோலைகள் | 15,000.00 | 15,000.00 |
| முன்செலுத்திய உத்தியோகத்தர் செலவு | 14,704,943.13 | 16,060,711.67 |
| | **51,334,602.58** | **40,694,347.10** |

**(15) பணம் மற்றும் பண**

| | | |
|---|---|---|
| இலங்கை வங்கி - காசாளரிடம் வைப்பு | 2,500.00 | - |
| இலங்கை வங்கி - லேக் வியூ | 26,733,368.90 | 15,067,165.78 |
| தேசிய அபிவிருத்தி வங்கி | 6,067,851.26 | 62,406.51 |
| இலங்கை வங்கி - கூட்டுறவுக் கிளை | 4,683,705.38 | 1,638,984.99 |
| சம்பத் வங்கி - கண்டி | 4,471.75 | 4,259.89 |
| சம்பத் வங்கி - காலி | 6,625.89 | 6,315.18 |
| இலங்கை வங்கி - அம்பாறை | 3,392.04 | 2,712.19 |
| இலங்கை வங்கி - ஹம்பாந்தோட்டை | 1,780.64 | 1,756.50 |
| இலங்கை வங்கி - பதுளை | 3,789.14 | 3,066.15 |
| சம்பத் வங்கி - குருநாகல் | 413.71 | - |
| கையிலுள்ள காசு | 1,373.76 | 1,129.64 |
| | 88,706.40 | 64,369.01 |
| | **37,597,978.87** | **16,852,165.84** |

**(16) கிடைக்கப்பெற்ற மானியங்கள்**

| | | |
|---|---|---|
| அரசாங்கப் பங்களிப்பு | 7,904,002.00 | 7,904,002.00 |
| அரசாங்கப் பங்களிப்பு - மோட்டார் வாகனம் | 13,000,000.00 | 13,000,000.00 |
| ருனேூ பங்களிப்பு | 2,110,282.00 | 2,110,282.00 |
| ஐவுஊ பங்களிப்பு | 12,716.35 | 12,716.35 |
| ஏற்றுமதி ஊக்குவிப்புச் செயலகம் | 202,677.32 | 202,677.32 |
| (-) அரச மானியங்களின் குறைப்பு | (3,866,736.19) | (2,523,657.46) |
| | **19,362,941.48** | **20,706,020.21** |

**(17) ஏற்பாடு மற்றும் ஏனைய பொறுப்புக்கள்**

| | | |
|---|---|---|
| கடன்திடட பங்களிப்பு | 7,567,706.09 | 7,359,415.95 |
| ஜாதிக சவிய | - | - |
| UPEPV | 2,108,251.77 | 2,108,251.77 |
| எக்ஸ்போ பிரிவு | 19,055,549.00 | 15,959,129.16 |
| UPEPV - கட்டுப்பாட்டுக் கணக்குகள் | (10,403,683.00) | (10,403,683.00) |
| மீளளிப்பு வைப்புகள் | 8,197,360.00 | 7,066,295.00 |
| | **26,525,183.86** | **22,089,408.88** |

## (18) ஓய்வூதியக் கொடுப்பனவுக் கடப்பாடு

| | | |
|---|---|---|
| மீதி மு/வ | 79,955,076.27 | 79,631,378.23 |
| உரிய வருடத்திற்கான ஏற்பாடு | 13,496,606.73 | 9,703,139.95 |
| உரிய வருடத்தினுள் செலுத்தப்பட்டவை | (9,077,407.75) | (9,379,441.91) |
| மீதி மு/செ | **84,374,275.25** | **79,955,076.27** |

## (19) வர்த்தகக் கொடுப்பனவுகள்

| | | |
|---|---|---|
| முத்திரைக்கட்டணக் கொடுப்பனவு | 15,775.00 | 15,475.00 |
| கோரப்படாத சம்பளம் | 19,922.30 | 21,872.30 |
| கோரப்படாத இதர கொடுப்பனவுகள் | - | - |
| ஊழியர் சேமலாபநிதிக் கொடுப்பனவு | 1,882,605.64 | 1,662,418.28 |
| ஊழியர் நம்பிக்கை நிதிக் கொடுப்பனவு | 225,912.82 | 199,490.30 |
| ஓய்வூதிய கொடுப்பனவு | 397.50 | - |
| ஊழியர்களின் இறுதிக் கொடுப்பனவு | 61,644.46 | 61,714.46 |
| கணக்காய்வுக் கட்டணக் கொடுப்பனவு | 3,269,004.00 | 2,487,075.00 |
| திருப்பிச் செலுத்த வேண்டிய பாதுகாப்பு வைப்பு – காசாளர் | 2,500.00 | 2,500.00 |
| காப்பீட்டு தொகை | 12,357.14 | - |
| விலை மனு கோரலுக்கான திருப்பிச் செலுத்த வேண்டிய பாதுகாப்பு வைப்பு | 76,000.00 | 52,000.00 |
| மாற்றப்படாத காசோலைகள் | 317,233.95 | 1,051,078.05 |
| ஏனைய அட்டுறு செலவுகள் | 57,347,103.94 | 57,122,377.00 |
| விவசாய வலய கொடுப்பனவிற்கான ஏற்பாடு | - | 1,092,000.00 |
| | **63,230,456.75** | **63,768,000.39** |

## (20) வங்கி மேலதிகப் பற்று

| | | |
|---|---|---|
| இலங்கை வங்கி - லேக் வியூ | 12,235,606.53 | 17,148,432.07 |
| இலங்கை வங்கி - காலி | 648.88 | 648.88 |
| தேசிய அபிவிருத்தி வங்கி | - | - |
| இரத்தாக்கப்பட்ட காசோலைகள் | - | - |
| | **12,236,255.41** | **17,149,080.95** |

## (21) முன்னைய வருடச் சீராக்கம்

ஏற்றுமதி அபிவிருத்திச் சபையின் அபிவிருத்தி ஹோல்டிங் (தனியார்) நிறுவனத்தில் இருந்து பங்கு உரிமையின் சீராக்கம் செய்யப்பட்டது.

## 31.12.2014ல் முடிவடைந்த ஆண்டுக்கான நிதி அறிக்கைக் குறிப்புகள்

**(1)** இலங்கை கணக்கீட்டு நியமம் 39ன் தேவைப்பாட்டிற்கிணங்க சேத இழப்பிற்காக உரிமைப் பங்குகள் பரீட்சிக்கப்பட்டன. இதற்கிணங்க 1.1.2011ல் ரூபா 31,698,150 தொகை செய்த இழப்பு ஏற்பாட்டுத் தொகையாகப் பதிவழிக்கப்பட்டது.

**(2) (2.1)** சுங்கத் திணைக்கள பிரதம சேகரிப்பாளரினால் திறைசேரியிலிருந்து வசூலிக்க வேண்டிய தொகையானது இலங்கை கணக்கீட்டு நியமம் 39ன் தேவைப்பாட்டிற்கிணங்க சேத இழப்பிற்காகப் பரீட்சிக்கப்பட்டது. இதற்கமையவாக 1.1.2011ல் சேத இழப்பிற்கான ஏற்பாட்டுத் தொகையான ரூபா 468,742,448.83 சிபாரிசு செய்யப்பட்டது.

**(2.2)** ஊழியர் கடன்

இலங்கை கணக்கீட்டு நியமம் 39 ற்கிணங்க ஏதாவது சேத இழப்பை அமுலில் உள்ள வட்டி வீதத்திலிருந்து கழித்து, ஊழியர் கடன் சிபாரிசு செய்யப்படுகிறது. ஊழியர் கடனுக்கு இணங்க 1.1.2011ல் வெளிநிற்கும் தொகையானது தேய்வுக் கிரயத்திற்கு அமைய அளவிடப்பட்டது. இதற்கிணங்க ஊழியர்களுக்கான முற்பணச் செலவும் ஐகுசுளு சீராக்கக் கணக்குத் தொகைகளுமாக ரூபா 16,060,711.67 க்கு அதிகாரம் அளிக்கப்பட்ட ஏட்டுப் பெறுமதிக்கேற்ப உருவாக்கப்பட்டது.

***நிதிக்கூற்றில் காட்டப்பட்டுள்ள மீதிகள் முறையே பின்வருமாறு,***

**(2.2.1)** ஊழியர் கடன் தொகையிலிருந்து IFRS சீராக்கக் கணக்கு மீதி கழிக்கப்பட்டது. இதற்கமைவாக ஐந்தொகையில் ஊழியர் கடன் நியாயமான பெறுமதியைத் தற்போது காட்டுகிறது.

| | |
|---|---|
| ஊழியர் கடன் | 43,867,269.13 |
| IFRS சீராக்கங்கள் | (14,704,943.13) |
| | 29,162,326.00 |

**(2.2.2)** ஊழியர் முற்பணக் கிரயமானது நடைமுறைச் சொத்துக்களின் கீழ் சீராக்கமாகக் காட்டப்படுகின்றது.

| | |
|---|---|
| முற்பண ஊழியச் செலவு | 14,704,943.13 |

**(3)** எக்ஸ்போ அலகுக்கு வேண்டிய இருப்பு LKAS 39 இன் பிரகாரம் மெதுவாக நிலைமாறக்கூடிய செலவில் அளவிடப்படுகின்து. இதை மேலே சரிசெய்தல் தாக்கம் குறிக்கின்றது.

විගණකාධිපති දෙපාර්තමේන්තුව
கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்
AUDITOR GENERAL'S DEPARTMENT

මගේ අංකය / எனது இல. / My No. ரீசீ2/எவ்/ஈடீபீ/1/14/40 — ඔබේ අංකය / உமது இல. / Your No. — දිනය / திகதி / Date 2015 ஒக்தோபர் 07

தலைவர்,

இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபை.

**இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபையின் 2014 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீது 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை**

---

இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபையின் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2014 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 1979 இன் 40 ஆம் இலக்க இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபை அதிகாரச்சட்டத்தின் 16 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் சபையின் ஆண்டறிக்கையுடன் சேர்த்துப் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன. நிதி அதிகாரச்சட்டத்தின் 13(7)(ஏ) பிரிவின் பிரகாரம், ஒரு விபரமான அறிக்கையொன்று சபையின் தலைவருக்கு 2015 மே 28 ஆந் திகதி வழங்கப்பட்டது.

## 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

---

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

අංක 306/72, පොල්දූව පාර, බත්තරමුල්ල, ශ්‍රී ලංකාව, .- இல. 306/72, பொல்தூவ வீதி, பத்தரமுல்லை, இலங்கை.- No. 306/72, Polduwa Road, Battaramulla, Sri Lanka
+94-11-2887028-34 +94-11-2887223 oaggov@sltnet.lk www.auditorgeneral.gov.lk

## 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 - 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் சபையின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி சபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) ஆம் மற்றும் (4) ஆம் உபபிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

1.4 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

2. நிதிக்கூற்றுக்கள்

2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபையின் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

2.2.1 இலங்கை கணக்கீட்டு நியமங்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) இலங்கை கணக்கீட்டு நியமம் 01

(i) மீளாய்வாண்டின் போதும் முன்னைய ஆண்டின் போதும் மூலதனச் சொத்துக்களை கொள்வனவு செய்வதற்காக அரச மானியங்கள் முறையே ரூபா 8,779,054 தொகையும் ரூபா 1,756,112 தொகையும் கிடைக்கப் பெற்றிருந்ததுடன், அது நிதி நிலைமைக் கூற்றில் மூலதன மானியமாக கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ii) நியமத்தின் பிரகாரம் நிதிக்கூற்றுக்களில் அறிக்கையிடப்படும் அனைத்து பெறுமதிகளுக்காக முன்னைய காலப்பகுதிக்குரிய ஒப்பீட்டுத் தகவல்கள் காண்பிக்கப்பட வேண்டிய போதிலும், ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள் தொடர்பாக அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) இலங்கை கணக்கீட்டு நியமம் 07

(i) நியமத்தின் பிரகாரம் காசுப்பாய்ச்சல் கூற்றில் தொழிற்பாடு, முதலீடு மற்றும் நிதி செயற்பாடுகள் என்பவற்றை தெளிவாக இனங்கண்டு காசுப்பாய்ச்சல் கூற்று சரியாக தயாரிக்கப்படாதிருந்ததுடன், கையிலுள்ள காசு மற்றும் வங்கி மீதி என்பன சரியாக பகுப்பாய்வு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ii) இணைந்த கம்பனியின் ரூபா 83,131,040 தொகையான இலாபப் பங்கு சீராக்கம் காசுப்பாய்ச்சல் கூற்றில், காசுப்பாய்ச்சலாக முதலீடு மற்றும் நிதி செயற்பாடுகளிலிருந்து உருவான காசுப்பாய்ச்சலின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்தது.

(இ) இலங்கை கணக்கீட்டு நியமம் 08

(i) 2011 திசெம்பர் 31 வரை நிலையான சொத்துக்களின் பெறுமானத்தேய்வு கணக்கீட்டுக் கொள்கையாக காணப்பட்ட குறைந்து செல்லும் மீதி முறைமை 2012 ஆம் ஆண்டிலிருந்து எளிய முறைமைக்கு மாற்றப்பட்டிருந்த போதிலும், நியமத்தின் பிரகாரம் கணக்கீட்டுக் கொள்கைகள் மாற்றப்படும் போது பின்னோக்கி சீராக்கம் செய்யப்பட்டிருக்கவில்லை.

(ii) நியமத்தின் பிரகாரம் ரூபா 418,476,859 தொகையான முன்னைய ஆண்டுகளின் சீராக்கங்கள் நிதிக்கூற்றுக்களில் பின்னோக்கிய சீராக்கங்களை விரிவாக வெளிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(iii) முன்னைய ஆண்டின் போது மீள்மதிப்பீட்டு இலாபம் ரூபா 100,000 கூடுதலாக காண்பிக்கப்பட்டதை நியமத்தின் பிரகாரம் சீராக்கம் செய்யாமல், மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களில் விரிவானதல்லாத வருமானத்தின் கீழ் சீராக்கம் செய்தமை குறிப்புக்கள் மூலம் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஈ) இலங்கை கணக்கீட்டு நியமம் 16

(i) பயன்பாட்டிற்கு எடுக்கப்படும் ரூபா 48,902,871 கிரயத்திலான தேறிய பெறுமதி பூச்சியமான நடைமுறையல்லாத சொத்துக்கள் மீள்மதிப்பீடு செய்யப்பட்டு நியாயமான பெறுமதிகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) சொத்துக்களின் பெறுமானத்தேய்வு வீதத்தினை தீர்மானிக்கும் போது அச்சொத்துக்களின் பயன்தரு ஆயுட் காலத்தின் அடிப்படையில் தீர்மானிக்கப்பட வேண்டிய போதிலும் மோட்டார் வாகனங்களுக்கு பெறுமானத்தேய்வு செய்யும் போது பயன்படுத்தப்பட்ட காலத்தை அடிப்படையாகக் கொண்டு 10 ஆண்டுகளுக்கு குறைவான மோட்டார் வாகனங்களிற்காக 10 சதவீதமும், 10 ஆண்டுகளுக்குக் மேற்பட்ட மோட்டார் வாகனங்களிற்காக 20 சதவீதமுமாக கணக்கிடப்பட்டிருந்தன.

(iii) நியமத்தின் பிரகாரம் மீள்மதிப்பீட்டு இலாபத்தின் உரித்தை காட்டுதல் கூற்றில் காண்பிக்கப்பட வேண்டியதுடன், பின்னர் ஏற்படும் மீள்மதிப்பீட்டு நட்டம் அம் மீள்மதிப்பீட்டு இலாபத்திற்கு சீராக்கம் செய்யப்பட வேண்டிய போதிலும், நிதிக்கூற்றுக்களில் மீள்மதிப்பீட்டு இலாபத்தினை வேறாக காண்பிக்கப்படாமல் இருந்ததுடன், மீளாய்வாண்டின் போது மீள்மதிப்பீட்டு நட்டமாக ரூபா 100,000 தொகை விரிவானதல்லாத வருமானத்தின் கீழ் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(iv) ஏனைய உபகரணங்களுக்கான பெறுமானத்தேய்வு விகிதம் கணக்கு கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(உ) இலங்கை கணக்கீட்டு நியமம் 19

நியமத்தின் பிரகாரம் ஊழியர் பணிக்கொடை கடப்பாடுகள் கணிப்பீடு செய்யும் போது அலகு கடன் முறைமை பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஊ) இலங்கை கணக்கீட்டு நியமம் 20

சபைக்கு அவ்வப்போது அரசிடமிருந்தும் வெளித்தரப்பினரிடமிருந்தும் கிடைக்கப்பெற்ற ரூபா 15,325,675 தொகையான மானியங்கள் மற்றும் அவற்றின் காலக்கழிவு பெறுமதியான ரூபா 3,866,736 தொகை மூலதன மற்றும் ஒதுக்கத்தின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்தது.

(எ) இலங்கை கணக்கீட்டு நியமம் 24

நியமத்தின் பிரகாரம் தொடர்புடைய தரப்பினரின் கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பான விரிவான தகவல்கள் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஏ) இலங்கை கணக்கீட்டு நியமம் 39

(i) 2012 ஆம் ஆண்டில் ரூபா 122,822,417 தொகையான இழப்பு ஏற்பாடு 2013 மற்றும் 2014 ஆம் ஆண்டுகளுக்கான பங்கு மூலதன முதலீடு மீளாய்வு செய்யப்படாமல் மீளாய்வாண்டிற்காகவும் அம்மீதி முன்கொண்டு வரப்பட்டிருந்தது. கடந்த 07 ஆண்டு காலப்பகுதியில் பங்கிலாபம் கிடைக்காத கம்பனிகளில் முதலீட்டுப் பெறுமதி ரூபா 25,750,000 ஆக இருந்தமை மேலும் அவதானிக்கப்பட்டதுடன், அதற்காக நட்ட ஒதுக்கீடு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ii) சபையின் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் நிலுவையாக இருந்த ஏற்றுமதிக் கடன்மீதி ரூபா 46,391,543 ஆக இருந்ததுடன், அதில் ரூபா 45,477,591 தொகைக்காக இழப்பு ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்தது. ஏற்றுமதி கடன் அறவிடுவதின் முன்னேற்றத்தைக் கருத்திற் கொள்ளாமல் 2012, 2013 மற்றும் 2014 ஆம் ஆண்டுகளின் போது இழப்பு ஏற்பாட்டிற்காக சமமான அளவு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தமையால் நட்டமடைந்த கம்பனிகளிடமிருந்து அறவிடப்பட்ட ரூபா 107,500 தொகையான அகற்றுதல்கள் சீராக்கப்பட்டிருக்கவில்லை.

## 2.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மூலதனத் தன்மையிலான ரூபா 218,559 தொகையான செலவினம், வருமான செலவினமாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(ஆ) 2013 ஆம் ஆண்டின் போது அட்டுறு செலவினத்தின் கீழ் ஏற்பாடு மேற்கொள்ளப்படாத ரூபா 7,357,040 கூட்டுத்தொகை மீளாய்வாண்டின் போது அட்டுறு செலவினக் கணக்கிற்கு வரவு வைக்கப்பட்டிருந்ததுடன், ஏற்பாடு செய்யப்பட்டு மீளாய்வாண்டின் போது செலுத்தப்பட்ட ரூபா 3,988,213 தொகை அட்டுறு செலவினக் கணக்கிற்கு வரவு வைப்பதற்குப் பதிலாக முற்பணக் கணக்கிற்கு வரவு வைக்கப்பட்டிருந்தது.

(இ) 2015 ஆம் ஆண்டின் போது நடாத்தப்படவுள்ள வியாபாரக் கண்காட்சிக்காக வெளியிடப்பட்ட விளம்பரக் கட்டணங்களுக்காக ரூபா 1,071,131 தொகையான முற்பணங்கள் மீளாய்வாண்டின் போது செலுத்தப்பட்டிருந்ததுடன், அது மீளாய்வாண்டின் செலவினமொன்றாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(ஈ) இயலளவு அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் இரண்டு தேயிலை உற்பத்தி கம்பனிகளுக்கு ரூபா 02 மில்லியன் கொடுப்பனவு செய்வதற்கு சபையினால் மீளாய்வாண்டின் போது ஒப்பந்தமொன்று மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும், நிதிக்கூற்றுக்களில் அதற்காக ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(உ) உத்தியோகத்தர்களின் சேவைக்காலம் சரியாக கணக்கிடப்படாத காரணத்தினால் பணிக்கொடை ஒதுக்கீட்டுக் கணக்கின் மீதி ரூபா 231,561 ஆல் கூடுதலாக காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஊ) மீளாய்வாண்டின் இறுதியில் கடன்பட்டோர் கணக்கில் அசாதாரண செலவு ரூபா 92,995 தொகையும், கடன்கொடுத்தோர் கணக்கில் அசாதாரண வரவு ரூபா 10,528,683 தொகையுமாக காணப்பட்டதுடன் அம்மீதிகள் இனங்காணப்பட்டு தீர்க்கப்படுவதற்கோ அல்லது அது தொடர்பாக நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்துவதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(எ) ரூபா 1,072,659 தொகையான முற்பணக் கொடுப்பனவுகள் குறித்த ஆண்டுகளின் போது செலவினங்களுக்கு வரவு வைக்காமல் பின்னோக்கி சீராக்கம் செய்வதற்குப் பதிலாக மீளாய்வாண்டின் இலாபத்திற்கு எதிராக பதிவழிக்கப்பட்டிருந்தது.

(ஏ) ரூபா 80,984 கூட்டுத்தொகையான முற்பணங்களுக்குரிய சேவைகள் மற்றும் வழங்கல் பூர்த்தி செய்யப்பட்டிருக்கையில் அம்முற்பணங்கள் தீர்க்கப்பட்டு குறித்த செலவினங்களுக்கு கணக்கீடு செய்வதற்குப் பதிலாக, மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் தீர்க்கப்படாத முற்பணமாக நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஐ) ஏற்றுமதி உற்பத்தி கிராம கம்பனிகளிலிருந்து பெறவேண்டிய கடன் மீதிகளில் ரூபா 53,581 தொகையும் கிடைக்க வேண்டிய வட்டி ரூபா 2,823,088 தொகையுமாக ரூபா 2,876,669 கூட்டுத்தொகை கணக்கீடு செய்யப்பட்டிருக்க வில்லை.

(ஒ) ஏற்றுமதி நிலைமையில் மரக்கறிகள் தொடர்ச்சியாக உற்பத்தி செய்யும் நோக்கில் ஊவா பரணகம கிராமத்தை அடிப்படையாகக் கொண்டு ஆரம்பிக்கப்பட்டிருந்த செயற்திட்டத்திற்காக கிராமிய பொருளாதார புனரமைப்பு நிதியத்திலிருந்து ரூபா 30 மில்லியன் வழங்கப்பட்டிருந்தது. கட்டளையிடப்பட்டதன் பிரகாரம் பாதுகாப்பு வலைகள் கிடைக்காததன் காரணமாக ரூபா 25 மில்லியன் அந் நிதியத்திற்கு மீளச் செலுத்தப்பட்டிருந்ததுடன், மேலும் செலுத்த வேண்டிய ரூபா 5 மில்லியனிற்காக நிதிக்கூற்றுக்களில் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. மேலும் இச்செயற்திட்டத்தின் கீழ் ஒரு விவசாயிக்காக ரூபா 50,000 வீதம் வழங்கப்பட்ட ரூபா 5 மில்லியன் கடன் தொகையில் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதி வயிலும் ரூபா 2,108,252 தொகை அறவிடப்பட்டிருந்தது. அது கிராமிய பொருளாதார புனரமைப்பு நிதியத்திற்கு செலுத்தப்படாதிருந்ததுடன், திறைசேரிக்குச் செலுத்த வேண்டிய தொகையொன்றாக நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஓ) 2012 மார்ச் 28 முதல் 31 வரை நடைபெற்ற இலங்கை எக்ஸ்போ வியாபாரக் கண்காட்சிக்கு அனுசரணை வழங்குவதற்கு இணக்கம் தெரிவித்த 5 வெவ்வேறு கம்பனிகளிடமிருந்து கிடைக்க வேண்டிய ரூபா 2.5 மில்லியன் தொகையை அறவிடுவதற்கு அல்லது கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஔ) மீளாய்வாண்டின் போது செலுத்த வேண்டிய அலுவலக வாடகை ரூபா 516,495 அட்டுறு செலவினமாகக் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.2.3 விளக்கமளிக்கப்படாத வேறுபாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டின் முதலீட்டு பெறுமதி ரூபா 40,548,150 ஆக இருந்த போதிலும், பட்டோலைகளின் பிரகாரம் அம்மீதி ரூபா 31,698,150 ஆக இருந்தமையால் ரூபா 8,850,000 ஆன வேறுபாடொன்று காணப்பட்டது.

(ஆ) சபையின் சட்டப் பிரிவினால் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட ஏற்றுமதி கடன் மீதி மற்றும் நிதிக்கூற்றுக்களிலுள்ள அம்மீதிகளுக்கிடையே ரூபா 812,724 ஆன வேறுபாடொன்று இருந்ததுடன், அதற்காக காரணங்கள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.2.4 கணக்காய்விற்கான சான்றுகளின்மை

ரூபா 217,378,519 தொகையான நடைமுறைச் சொத்துக்கள் மற்றும் ரூபா 44,094,883 தொகையான நடைமுறைப் பொறுப்புக்களுக்காக மீதி உறுதிப்படுத்தல் கடிதங்கள், பட்டோலைகள் மற்றும் காலப்பகுப்பாய்வு என்பனவும் ரூபா 88,410,118 தொகையான முதலீட்டிற்காக பங்குச் சான்றிதழும் கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 2.3 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) சபையின் சேவையிலிருந்து விலகிச் சென்ற உத்தியோகத்தரொருவரிடமிருந்து 2006 ஆம் ஆண்டிலிருந்து சபைக்கு அறவிடப்பட வேண்டிய ரூபா 65,254 தொகையும் இனங்காணப்படாத கடன்பட்டோரிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 51,235 தொகையுமாக ரூபா 116,489 கூட்டுத்தொகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) வெவ்வேறு நிகழ்ச்சித்திட்டங்களுக்காக வழங்குனருக்கு வழங்கப்பட்டிருந்த ரூபா 3,463,068 தொகையான முற்பணம் அந்நிகழ்ச்சித்திட்டம் செயற்பாடற்று இருக்கையிலும் பணத்தை மீள அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை.

(இ) 2014 சனவரி 09 ஆந் திகதி சோனி டிஜிடல் வொய்ஸ் ரெகோடரொன்று கொள்வனவு செய்வதற்காக தனியார் நிறுவனமொன்றுக்கு உடன்படிக்கையொன்று இல்லாமல் வழங்கப்பட்ட ரூபா 16,000 முற்பணத் தொகை மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் தீர்வு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஈ) அலுவலகத்தின் உப வாடகை உடன்படிக்கையின் பிரகாரம் அறவிடப்பட வேண்டிய வாடகையான ரூபா 735,875 தொகையை சபை அறவிடப்பட்டிருக்க வில்லை.

## 2.4 போதிய அதிகாரத்தினால் உறுதிப்படுத்தப்பட்டிராத கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) வாடகை உரிமையாளருடன் உடன்படிக்கையொன்றை மேற்கொள்ளாமல் 2014 மார்ச் 15 ஆந் திகதி முதல் 2014 ஒக்தோபர் 25 வரை சபையின் தலைமை அலுவலகத்திற்காக மாதமொன்றுக்கு ரூபா 4,500,000 வீதம் ரூபா 31,500,000 தொகையான வாடகை செலுத்தப்பட்டிருந்தது. மேலும் 2014 யூலை 21 ஆந் திகதிய சீஎம்/சீஎம்சீ/ஆர்பி/102 ஆம் இலக்க பாரிய கொழும்பு விலைமதிப்புத் திணைக்களத்தின் மாகாண விலை மதிப்பீட்டாளரின் அறிக்கையின் பிரகாரம்

அதிகரிக்கப்பட்ட புதிய குத்தகை வாடகை ரூபா 500,000 தொகையை 2014 யூலை 21 ஆந் திகதி முதல் செலுத்தப்பட வேண்டிய போதிலும், 2014 ஏப்ரல் மாதத்திலிருந்து செலுத்தியமையால் கூடுதலாகச் செலுத்திய ரூபா 2,000,000 ஐ சபை மீள அறவிட்டிருக்கவில்லை.

(ஆ) தெஹிவள கல்கிஸ்ஸ மாநகர சபைக்குரிய கட்டிடமொன்றில் சபையின் ஒரு களஞ்சியம் நடாத்திச் செல்லப்பட்டு வருவதுடன், அந்நிறுவகத்துடன் உடன்படிக்கையொன்று மேற்கொள்ளாமல் மீளாய்வாண்டிற்காக குத்தகை வாடகை ரூபா 99,960 செலுத்தப்பட்டிருந்தது. மேலும் கட்டிடத்தின் பகுதியொன்று தனியார் கம்பனியொன்றுக்கு உப வாடகைக்கு வழங்கப்பட்டிருந்த போதிலும், அக்கம்பனியுடனும் உப வாடகை உடன்படிக்கையொன்று மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை.

(இ) 1996 பெப்ரவரி 20 ஆந் திகதி பணிப்பாளர் சபை அங்கீகாரத்தின் பிரகாரம் 1996 ஆம் ஆண்டினுள் 5 ஏற்றுமதி உற்பத்தி கிராமங்களை ஸ்தாபிப்பதற்காக ஒரு ஏற்றுமதி உற்பத்திக் கிராமத்திற்கு ஆகக்கூடியது ரூபா 1,000,000 தொகை 7 சதவீத வருடாந்த வட்டியின் கீழ் கடன்தொகையொன்றை வழங்குவதற்கு சபை இணங்கியிருந்த போதிலும், உடன்படிக்கையொன்று இல்லாமல் ஒரு ஏற்றுமதி உற்பத்தி கிராம கம்பனிக்கு வழங்கப்பட்டிருந்த ரூபா 2,493,310 ஆன கடன்தொகையில் எதுவித பணத்தையும் இதுவரையில் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் இந்த நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் உதவிகள் அங்கீகரிக்கப்படாதிருந்த போதிலும், இரண்டு கம்பனிகளுக்கு மீள அறவிடப்படாத உதவிகளாக பா 13,495,029 தொகை வழங்கப்பட்டிருந்தது.

2.5 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடன் இணங்காமை

பின்வரும் இணங்காமைகள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங் களுடனான தொடர்பு | இணங்காமைகள் |
|---|---|
| (அ) 1979 இன் 40 ஆம் இலக்க ஏற்றுமதி அபிவிருத்திச் அதிகாரச் சட்டம் | |
| (i) 2(ட) ஆம் பிரிவு | ஏற்றுமதி அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் மற்றும் கொள்கை அமுலாக்கலுக்கான தேசிய அபிவிருத்தி மன்றம் 1992 ஆம் ஆண்டிலிருந்து முதல் 2014 ஆம் ஆண்டு வரையான 22 ஆண்டுகளில் கூடியிருக்கவில்லை. |
| (i) 12(1) ஆம் பிரிவு | சபையினால் 1988 ஆம் ஆண்டிலிருந்து தனியார் கம்பனிகளில் ரூபா 929,548,150 தொகை முதலீடு செய்யப்பட்டிருந்த போதிலும், அதற்காக நிதி அமைச்சரின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்க வில்லை. மிகை நிதியை முதலீடு செய்வது தொடர்பாக பொது முயற்சிகள் திணைக்களத்தினால் அவ்வப்போது விநியோகிக்கப்பட்ட சுற்றறிக்கைகள் தொடர்பில் சபையினால் கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை. |

(ஆ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக்கோவை

---

XV ஆம் அத்தியாயத்தின் 10.1 ஆம் பிரிவு மற்றும் 2007 செப்தம்பர் 11 ஆந் திகதிய 21/2007 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கை

நாட்டிலிருந்து வெளியேறுவதற்கு பிரதமரின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்படாமல் 8 உத்தியோகத்தர்கள் வெளிநாடு சென்றிருந்தனர்.

(இ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணங்கள்

---

(i) நிதிப் பிரமாணம் 71

பொது நலவாய அமைச்சின் அரச தலைவர்களின் மாநாட்டிற்கு இணையாக நடாத்தப்பட்ட வியாபாரக் கண்காட்சியின் ஒருங்கிணைப்பு நடவடிக்கைகளுக்காக வர்த்தகத் திணைக்களத்தின் ஓய்வுபெற்ற உத்தியோகத்தரொருவர் 2013 செப்தம்பர் 24 ஆந் திகதி முதல் 2013 நவம்பர் 23 ஆந் திகதி வரை ரூபா 80,000 சம்பளம் மற்றும் ஏனைய நலன்கள் செலுத்தப்பட்டிருந்த போதிலும், அதற்காக திறைசேரியின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்க வில்லை.

(ii) நிதிப் பிரமாணம் 104(1), 104(3), 104(4) மற்றும் 110

05 வாகன விபத்துக்கள் தொடர்பாக நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் விபத்து நேர்ந்த நாள் முதல் 03 மாதங்களுக்குள் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டு இதற்குப் பொறுப்பான உத்தியோகத்தர்கள் இனங்காணப்பட்டு உத்தேசிக்கப்பட்ட ஒழுக்காற்று நடவடிக்கை உட்பட பூரணமான அறிக்கை ஒன்று

| | | |
|---|---|---|
| | | பரிசோதனைக் குழுவால் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு சமர்ப்பிக்கப்பட்டிராததுடன் அவ் விபத்துத் தொடர்பான விபரங்களடங்கிய இழப்புப் பதிவேடும் பேணப்பட்டிருக்கவில்லை. |
| (iii) | நிதிப் பிரமாணம் 177 | சேகரிக்கப்பட்ட அரசின் பணத்தை நாள்தோறும் வங்கியிலிடப்பட வேண்டிய போதிலும், சபைக்கு கிடைத்த ரூபா 74,972 தொகை 02 மாத காலம் தாமதத்தின் பின்னர் வங்கியிலிடப்பட்டிருந்தது. |
| (iv) | நிதிப் பிரமாணம் 322(2) | கொடுப்பனவு செய்யப்படாத சம்பளம் ரூபா 24.390 தொகை மற்றும் சிறாப்பரிடமிருந்த ரூபா 7,839 தொகை என்பவற்றை அரசின் வருமானத்திற்கு செலவு வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (v) | நிதிப் பிரமாணம் 371(2) (ஆ),(இ) | ஒரு சந்தர்ப்பத்தில் வழங்கப்படும் செயல் நிமித்த உபகட்டுநிதி ரூபா 20,000 இற்கு மேற்படக் கூடாத போதிலும், சபையினால் 37 சந்தர்ப்பங்களில் ரூபா 1,563,500 கூட்டுத்தொகையான முற்பணங்கள் நிதிப்பிரமாணங்களுக்கு முரணாக வழங்கப்பட்டிருந்தன. முற்பணமாக பெற்றுக் கொண்ட முழுத்தொகை மற்றும் முற்பணமாக வழங்கிய தொகையில் 50 சதவீதத்திற்கு மேற்பட்ட அளவு மீள தீர்வு செய்யப்பட்டிருந்ததுடன், குறித்த உத்தியோகத்தர்களால் ரூபா 88,490 தொகையை 06 முதல் 27 நாட்கள் வரையான காலப்பகுதியில் வைத்துக் கொள்ளப்பட்டிருந்தது. |

15

| | | |
|---|---|---|
| (vi) | நிதிப் பிரமாணம் 396 | வழங்கப்பட்டு 06 மாதங்களுக்கு மேற்பட்ட காலம் கொடுப்பனவிற்காக சமர்ப்பிக்கப்படாத ரூபா 317,234 தொகையான 18 காசோலைகள் தொடர்பாக நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (vii) | நிதிப் பிரமாணம் 1645 | வாகனத்தின் பாதுகாப்பு தொடர்பாக செய்யப்படும் மாற்றங்கள் தொடர்பான சகல தகவல்களையும் உள்ளடக்கிய சம்பவப் பதிவேட்டுப் புத்தகங்கள் பராமரிக்கப்பட வேண்டிய போதிலும், சபையினால் 31 வாகனங்களுக்கு உரித்தான வாகன சம்பவக் குறிப்பேடுகள் பேணப்பட்டிருக்கவில்லை. |
| (viii) | நிதிப் பிரமாணம் 1646 | ஒதுக்கப்பட்ட வாகனங்களின் மாதாந்த பொழிப்புக்கள் மற்றும் ஏனைய வாகனங்களின் நாளாந்த ஓட்டப் பதிவேடுகள் என்பவற்றின் மூலப் பிரதிகளை உரிய மாதம் முடிவடைந்து அடுத்த மாதத்தின் 15 ஆம் திகதிக்கு முன்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் 2014 ஆம் ஆண்டின் நாளாந்த ஓட்ட அட்டவணைகள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (viii) | நிதிப் பிரமாணம் 1647 (உ) | வாகனப் பதிவேடொன்று பேணப்பட்டிருக்கவில்லை. |

(ஈ) திறைசேரி சுற்றறிக்கைகள்

| | | |
|---|---|---|
| (i) | 1978 திசெம்பர் 19 ஆம் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரி சுற்றறிக்கை | நிலையான சொத்துப் பதிவேடு ஒன்று பேணப்பட்டிருக்கவில்லை. |

(ii) 2010 ஒக்தோபர் 11 ஆந் திகதிய எம்ஓஎவ்பீ/01/2010/01 ஆம் இலக்க சுற்றறிக்கை

- 5 (i)ஆம் பிரிவு

அமையப் படிகள் வெளிநாட்டு அரசு அல்லது நிறுவனத்தினால் செலுத்தப்படாத சந்தர்ப்பத்தின் போது செலவிடப்படும் பிரயாணச் செலவினம், விமான நிலையக் கட்டணம், விசாக் கட்டணம் என்பவற்றை தீர்த்துக் கொள்வதற்கே செலுத்த முடியுமான போதிலும், வெளிநாட்டுப் பயணத்திற்காக குறித்த வெளிநாட்டு அனுசரணை நிறுவனத்தினால் அச்செலவினங்களுக்காக அனுசரணை வழங்கியிருக்கையில் சபையினாலும் 5 உத்தியோகத்தர்களுக்கு அமையப் படிகளாக ரூபா 286,597 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

- 06(i) ஆம் பிரிவு

வெளிநாட்டுப் பயணங்களுக்காக இணைந்த படிகள் கொடுப்பனவின் போது சுற்றறிக்கையின் பிரகாரம் இரண்டாவது தொகுதியின் கீழ் செலுத்த வேண்டிய 6 உத்தியோகத்தர்களுக்கு 2013 மற்றும் 2014 ஆம் ஆண்டுகளில் முதலாவது தொகுதியின் கீழ் இணைந்த படிகள் கொடுப்பனவு செய்தமையால் முறையே ரூபா 448,622 தொகை மற்றும் ரூபா 250,728 தொகை கூடுதலாக கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

(உ) அரச நிதிச் சுற்றறிக்கை

(i) 2001 பெப்ரவரி 28 ஆந் திகதிய பீஎவ்/பீசு 14 ஆம் இலக்க சுற்றறிக்கையின் vii

கூட்டங்கள், மாநாடுகள் மற்றும் செயலமர்வுகள் என்பவற்றை நடாத்துவதற்கு அரச நிறுவனங்களில் வசதிகள் காணப்படுகையில் அவ்வாறான

| | | |
|---|---|---|
| | ஆம் பிரிவு | நிகழ்ச்சித்திட்டங்களை ஹொாட்டேல்களில் நடாத்தி ரூபா 83,600 தொகை ஹொட்டெல் கட்டணங்களாக கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. |
| (ii) | 2002 நவம்பர் 28 ஆம் திகதிய ஐஏஐ/2002/02 ஆம் இலக்க சுற்றறிக்கை | கணனி மற்றும் கணனி உதிரிப்பாகங்களுக்காக வேறான ஓர் சொத்துப் பதிவேடு பேணப்பட வேண்டிய போதிலும் ரூபா 37,066,961 பெறுமதியான கணனி மற்றும் உதிரிப்பாகங்களுக்காக அத்தகைய பதிவேடொன்று பேணப்பட்டிருக்க வில்லை. |
| (iii) | 2009 திசெம்பர் 09 ஆம் திகதிய 441 ஆம் இலக்க சுற்றறிக்கை | |
| | • 02 மற்றும் 03 ஆம் பிரிவுகள் | குறித்த காலப்பகுதியில் நிதிப் பிரமாண ஏற்பாடுகளின் பிரகாரம் பொருள் மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட்டு அறிக்கையொன்றை கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| | • 3.5 ஆம் பிரிவு | 2013 பொருள் மெய்மையாய்வு அறிக்கையின் பரிந்துரைகள் இல்லாமல் 258 பொருள் உருப்படிகள் ஏலத்தில் விற்பனை செய்யப்பட்டிருந்தன. |
| (ஊ) | 2010 செப்தெம்பர் 06 ஆந் திகதிய கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 9.3.1(ஆ) ஆம் பந்தி | சபையின் வாகனமொன்றைப் பழுதுபார்ப்பதற்காக தனியார் கம்பனியொன்றுக்கு ரூபா 274,902 தொகை கொடுப்பனவு செய்யப்பட்டிருந்த போதிலும், அதற்காக வரிசை அமைச்சின் செயலாளரின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்க வில்லை. |

| | | |
|---|---|---|
| (எ) | 2003 யூன் 02 ஆம் திகதிய பீஈடி/12 ஆம் இலக்க நல்லாளுகை தொடர்பான பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 5.2.3 ஆம் பந்தி | பாதீட்டைச் சமர்ப்பிக்கையில் 2014 திசெம்பர் 31 ஆம் திகதி முடிவுற்ற ஆண்டிற்காக பாதிடப்பட்ட வருமானம் மற்றும் செலவினக் கூற்று காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் அத் திகதியில் பாதிடப்பட்ட ஐந்தொகை என்பன சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், மீளாய்வாண்டிற்காக சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஏ) | 2003 ஒக்தோபர் 06 ஆந் திகதிய என்பீ/3 ஆம் இலக்க தேசிய திட்டமிடல் திணைக்களத்தின் சுற்றறிக்கை | புதிய செயற்திட்டமொன்று செயற்படுத்து வதற்கு முன்னர் செயற்திட்டத்திற்குரிய முன்மொழிவு தேசிய திட்டமிடல் திணைக்களத்திற்கு அனுப்பி அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட வேண்டிய போதிலும், சபையினால் மீளாய்வாண்டில் செயற்படுத்தப் பட்ட ரூபா 21.3 மில்லியன் தொகையான 2 செயற்திட்டங்களுக்காக அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| (ஐ) | 2011 பெப்ரவரி 11 ஆந் திகதிய 57 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 2 ஆம் பந்தி | பொது முயற்சிகளினால் மேற் கொள்ளப்படுகின்ற விளம்பர நிகழ்ச்சித் திட்டங்கள், முறையாக தயாரித்து கிரய நலன்கள் பகுப்பாய்வுடன் அதன் நோக்கம், கிரயம், பெறுபேறுகள் என்பவற்றின் அடிப்படையில் செயல்நடவடிக்கைத் திட்டத்திற்கு உட்படுத்தி பொது முயற்சிகள் திணைக்களத்தின் அங்கீகாரத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், விளம்பரங்கள் மற்றும் அனுசரணைகள் விளம்பர அறிவித்தல்களுக்காக ரூபா 6,776,430 தொகை செலவிடப்பட்டிருந்த போதிலும், 2014 இன் செயல்நடவடிக்கைத் திட்டத்தில் அவற்றை தெளிவாக இணங்காணக்கூடிய வகையில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. |

3. நிதி மீளாய்வு

3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2014 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான சபையின் செயற்பாட்டு நடவடிக்கைகளின் நிதி விளைவுகள் ரூபா 105,651,865 மிகையாக இருந்ததுடன் அதனோடொத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா 100,514,844 ஆகக் காணப்பட்டது. முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டின் நிதி விளைவுகளில் ரூபா 5,137,021 தொகையான சாதகமான அதிகரிப்பொன்று அவதானிக்கப்பட்டது.

4. செயற்பாட்டு மீளாய்வு

4.1 செயலாற்றல்

ஏற்றுமதி மேம்பாட்டு நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் வெளிநாட்டு வியாபாரக் கண்காட்சிகளின் தெரிவுப் பரிசோதனையின் போது 5 கண்காட்சிகளுக்காக 143 ஏற்றுமதியாளர்கள் பங்குபெறச் செய்யப்பட்டு ரூபா 9,702,584 தொகை செலவிப்பட்டிருந்த போதிலும், அவர்களில் ஏற்றுமதி மேம்பாட்டிற்கு 17 ஏற்றுமதியாளர்கள் மாத்திரம் பங்களிப்புச் செய்திருந்தனர். இதன் பிரகாரம் ஏற்றுமதி வருமானம் அதிகரிப்பு தொடர்பிலும், வெளிநாட்டு சந்தைகளில் கண்காட்சிக்காக ஏற்றுமதியாளர்களை பங்குபெறச் செய்தலும் ஆக்கபூர்வமான முறையில் இடம்பெற்றிருக்கவில்லை.

4.2 முகாமைத்துவ செயற்திறமையின்மை

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பொது நலவாய நாடுகளின் அரச தலைவர்களின் மாநாட்டிற்கு இணையாக நடாத்தப்பட்ட வியாபாரக் கண்காட்சிக்காக தொலைத்தொடர்பு நிறுவனமொன்று ரூபா 5 மில்லியன் பங்களிப்பினை வழங்குவதற்கு இணங்கியிருந்த போதிலும், எழுத்துமூல உடன்படிக்கையொன்றோ அல்லது அனுசரணை வழங்குவதாக உறுதியொன்றோ பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை. ஆதலால் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் ரூபா 2.5 மில்லியன் தொகையை அறவிடுவதற்கு முடியாதிருந்தது. மேலும் இவ்வியாபாரக்

கண்காட்சிக்கு அனுசரணை வழங்கிய நிறுவனத்திற்காக விற்பனைக் கூடங்கள் மற்றும் விளம்பர நிகழ்ச்சித்திட்டங்களுக்காக இடவசதிகள் இலவசமாக வழங்கப்பட்டிருந்த போதிலும், அனுசரணைக்கு வழங்க வேண்டிய வசதிகள் அல்லது நிபந்தனைகள் என்னவென்பது தொடர்பாக சபையின் கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) முதலீடு

------------

(i) மீளாய்வாண்டில் கலைக்கப்பட்ட 3 கம்பனிகளின் சாதாரண பங்குகளில் முதலீட்டுப் பெறுமதியான ரூபா 17,315,000 தொகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) புதிய கம்பனிச் சட்டத்தின் கீழ் மீள பதிவுசெய்யப்படாததன் பேரில் கம்பனி பதிவேட்டிலிருந்து பெயர் நீக்கப்பட்டிருந்த 16 கம்பனிகளின் முன்னுரிமைப் பங்குகளின் பெறுமதி ரூபா 34,591,428 தொகையினதும் 17 கம்பனிகளின் சாதாரண பங்குகளின் பெறுமதி ரூபா 5,132,890 தொகையினதும் முதலீடுகளை தீர்வு செய்வதற்காக சபையினால் முறையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) ஏற்றுமதி கம்பனிகளில் நிதிப்பலத்தை மேம்படுத்தும் நோக்கில் 1983 – 1999 வரையான காலப்பகுதியினுள் ஆரம்பிக்கப்பட்ட கடன் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் 166 ஏற்றுமதிக் கம்பனிகளுக்கு வழங்கப்பட்டிருந்த ரூபா 59,659,978 தொகையான கடன் தொகையில் ரூபா 13,268,435 தொகை 2006 முதல் 2014 வரையான காலத்தில் அறவிடப்பட்டிருந்ததுடன், 2005 திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறு 139 ஏற்றுமதிக் கம்பனிகளிலிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 33,116,208 கூட்டுத்தொகையான நிலுவை கடன்தொகையை அறவிடுவதற்காக இதுவரை சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை. சபையினால் சட்ட நடவடிக்கைகளை குறித்த தினங்களில் எடுக்காமை மற்றும் சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்த கம்பனிகளிடமிருந்து கடனை அறவிட்டுக்கொள்வதிலுள்ள முன்னேற்றம் தொடர்பான பின்தொடர் நடவடிக்கைகள் எடுக்காமையால் அறவிடப்படாமல் காணப்படும் கடன் மீதிகளின் காலப்பகுப்பாய்வு 15 வருடங்கள் முதல் 20 வருடங்களுக்கு இடையில் காணப்பட்டமை அவதானிக்கப்பட்டது.

4.3 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2012, 2013 மற்றும் 2014 ஆம் ஆண்டுகளின் செயல்நடவடிக்கைத் திட்டத்திலும் பாதீட்டிலும் அங்கீகரிக்கப்படாத திறமை அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் பயிற்சியளிக்கப்பட வேண்டிய முயற்சியாளர்களின் எண்ணிக்கை, முயற்சியாளர்களை தெரிவுசெய்த அடிப்படை, பயிற்சித் துறை மற்றும் காலம் தொடர்பான முன்னர் இனங்காணப்படாமலும் உடன்படிக்கையொன்றில்லாமலும் 2011 ஒக்தோபர் 25 ஆந் திகதிய பணிப்பாளர் சபைத் தீர்மானத்தின் பிரகாரம் முயற்சியாளர்களை பயிற்றுவிப்பதற்காக தேசிய இளைஞர் மன்றத்திற்கு கையளிக்கப்பட்டிருந்தது. மன்னார் மாவட்ட செயலாளருக்கு 2014 ஏப்ரல் 22 ஆந் திகதி வழங்கப்பட்ட ரூபா 845,000 தொகையான முற்பணத்தொகை மாவட்ட செயலாளரால் தனியார் சாரதிப் பாடசாலையொன்றுக்கு நேரடியாக வழங்கப்பட்டிருந்தமையால் தேசிய இளைஞர் சேவைகள் மன்றம் தொடர்புபடுத்தப்பட்டு பெற்றுக்கொள்வதற்கு எதிர்பார்த்த பயிற்சிகள் என்னவென்பதும் தனியார் சாரதி பயிற்சி நிறுவனமொன்று ஊடாக ஏற்றுமதி துறையுடன் தொடர்பான பயிற்சிகள் என்னவென்பது கணக்காய்விற்கு விளக்கப்பட்டிருக்கவில்லை.

மேலும் செயற்படுத்த வேண்டிய செயற்திட்டங்கள் என்னவென்பது மாவட்ட செயலாளர் அறிவூட்டப்படாமையால் ரூபா 3,575,000 தொகையான முற்பணத் தொகை செலவிடப்படாது குறித்த மாவட்ட செயலாளரின் பொது வைப்புக் கணக்கில் விளைவற்றுக் காணப்பட்டமை அவதானிக்கப்பட்டது.

(ஆ) 2012 மார்ச் 28 மற்றும் 31 ஆந் திகதிகளில் நடைபெற்ற எக்ஸ்போ 2012 வியாபாரக் கண்காட்சி தொடர்பாக பண்டாரநாயக்க விமான நிலையத்தில் பராமரிக்கப்படுகின்ற எல்ஈடி கண்காட்சி பதாதை அக்கண்காட்சி முடிவடைந்ததன் பின்னரும் உடன்படிக்கைக் காலம் நீடிக்கப்பட்டு மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் பராமரிக்கப்பட்டிருந்தது. இப்பதாதைக்காக 2013 சனவரி – செப்தெம்பர் காலப்பகுதிக்காக உடன்படிக்கைத் தொகையை விட ரூபா 73,049 தொகை கூடுதலாக செலுத்தப்பட்டிருந்தது. மேலும் 2011 – 2014 காலப்பகுதியில் 15 மாதங்களில் அப்பதாதையில் எந்தவொரு விளம்பரமும்

மேற்கொள்ளப்படாதிருந்தமையால் இவ்விளம்பரத்தால் சபை எதிர்பார்த்த நோக்கம் நிறைவேற்றப்படாதிருந்தமை அல்லது விளம்பர தேவைப்பாடொன்று இல்லையென மேலும் அவதானிக்கப்பட்டது.

## 4.4 வெளிப்படையான மோசடிகள்

சபை பெற்றுக்கொண்டிருந்த பாதுகாப்பு சேவையின் நிலையப் பொறுப்பு உத்தியோகத்தர், சிரேஷ்ட பாதுகாப்பு உத்தியோகத்தர் மற்றும் வேறு இரண்டு பாதுகாப்பு பதவிகளில் கடமை புரிந்ததாக போலியான கையொப்பமிட்டு 2014 சனவரி 01 முதல் ஒக்தோபர் 31 வரை ரூபா 226,530 தொகை சம்பளமாக பெற்றுக்கொள்ளப்பட்டிருந்த போதிலும், அச்சம்பளத்தை மீளப் பெற்றுக் கொள்வதற்கு சபை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

## 4.5 நோக்கத்திற்கு முரணான கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மஹிந்த சிந்தனை தொலைநோக்கில் உள்ளதாக குறிப்பிட்டு ஏற்றுமதிச் சந்தைக்கு மிளகாய் வழங்குவதை நோக்காகக் கொண்டு வவுனியா மற்றும் மன்னார் மாவட்டங்களில் மிளகாய் பயிரச் செய்கை செயற்திட்டமொன்றை செயற்படுத்துவதற்கு ரூபா 15 மில்லியன் தொகை பணிப்பாளர் சபையினால் அங்கீகரிக்கப்பட்டிருந்தது. அத்தொகையை மிகைத்து ரூபா 22.7 மில்லியன் செலவு செய்து 50 ஏக்கரில் ஆரம்பிக்கப்பட்ட மிளகாய்ப் பயிர்ச் செய்கை செயற்திட்டத்திலிருந்து இதுவரை ஏற்றுமதி சந்தைக்கு எதுவித ஏற்றுமதியொன்றும் இடம்பெற்றிருக்கவில்லை. சபை ஏற்றுமதி மேம்படுத்தல் நிகழ்ச்சித்திட்டத்தினூடாக சபையின் நோக்கங்களுக்கு முரணாக விவசாய நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(ஆ) பொது நலவாய விளையாட்டு விழா – 2018 இல் அம்பாந்தோட்டைக்காக கேள்வி முன்வைத்தல், இலங்கையினுள் விளையாட்டு அபிவிருத்தி, தேசிய மற்றும் அகில இலங்கை மட்டத்தில் விளையாட்டு நிகழ்ச்சிகளை ஒழுங்கமைத்தல் மற்றும் விளையாட்டு பயிற்சி வசதிகளில் முதலீடு போன்ற நோக்கங்களை

நிறைவேற்றுவதற்காக நிறுவப்பட்ட தனியார் கம்பனியின் பங்கு மூலதனத்தில், சபையினால் அமைச்சரின் அங்கீகாரமின்றி ரூபா 8 மில்லியன் முதலீடு செய்யப்பட்டிருந்த போதிலும், அதற்கான நலன்கள் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(இ) 1979 இன் 40 ஆம் இலக்க இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபை அதிகாரச்சட்டத்தின் 12(1) ஆம் பிரிவின் பிரகாரம் சபையின் அதிகாரங்கள் மற்றும் செயற்பாடுகளுக்கு முரணாக மீளாய்வாண்டின் போது ரூபா 4,020,848 தொகையான செலவினம் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

### 4.6 பயனற்ற செலவினம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பயன்பாட்டிற்கு எடுக்கப்படாத அலுவலக உபகரணங்கள் மற்றும் 8 கணனி உதிரிப்பாக உருப்படிகள் 2009 ஆம் ஆண்டிலிருந்தும் 27 வாகன உதிரிப்பாகங்கள் 2011 ஆம் ஆண்டிலிருந்து விளைவற்றுக் காணப்பட்ட போதிலும் அது தொடர்பாக எதுவித நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) சபையினால் நடாத்தப்படுகின்ற கண்காட்சி நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் செயலமர்வுகளுக்காக உரிய முகாமைதத்துவமொன்றில்லாமல் எழுதுகருவிகள் கொள்வனவு செய்தமை மற்றும் அச்சிடப்பட்டதால் ரூபா 1,301,922 ஆன இருப்புக்கள் மற்றும் சபையின் பாவனைக்காக 2008 ஆம் ஆண்டிலிருந்து கொள்வனவு செய்யப்பட்ட 54 எழுதுகருவி உருப்படிகள் எதுவித பயன்பாட்டிற்கு எடுக்கப்படாமல் களஞ்சியப்படுத்தி வைக்கப்பட்டிருந்தன.

### 4.7 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

30 கம்பனிகளின் முன்னுரிமைப் பங்குகளில் மேற்கொள்ளப்பட்ட ரூபா 105,058,084 தொகையான முதலீட்டிற்காக 1997 – 2014 காலப்பகுதிக்கும் 31 கம்பனிகளில் சாதாரண பங்குகளில் மேற்கொள்ளப்பட்ட ரூபா 43,494,334 தொகையான முதலீட்டிற்காக 2001 – 2014 காலப்பகுதிக்கும் பங்கிலாபம் பெறப்பட்டிருக்கவில்லை.

## 4.8 பதவியணியினர் நிர்வாகம்

சபையின் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அங்கீகரிக்கப்பட்ட மற்றும் உள்ளபடியான பதவியணியினர் முறையே 282 மற்றும் 223 ஆக இருந்தமையால் வெற்றிடங்களின் எண்ணிக்கை 59 ஆக இருந்தது. அவ்வாறே ஒப்பந்த அடிப்படையில் 4 பேர் சேர்க்கப்பட்டிருந்த போதிலும், அதற்கான அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை.

## 4.9 ஏனைய அரச நிறுவனங்களுக்கு வழங்கப்பட்ட சபையின் வளங்கள்

2003 யூன் 02 ஆந் திகதி பீஈடீ 12 ஆம் இலக்க நல்லாளுகை தொடர்பான பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 8.3.9 ஆம் பிரிவிற்கு முரணாக சபைக்குரிய 5 வாகனங்கள் மற்றும் 4 உத்தியோகத்தர்கள் வரிசை அமைச்சின் சேவைக்கு ஈடுபடுத்தி மீளாய்வாண்டின் போது வாகனப் பராமரிப்பு செலவினமாகவும் பதவியணியினர் சம்பளம் மற்றும் படிகளாக முறையே ரூபா 1,593,229 தொகை மற்றும் ரூபா 1,231,027 தொகையுமாக மொத்தம் ரூபா 2,824,256 சபையினால் செலுத்தப்பட்டிருந்தன.

## 4.10 வாகனப் பயன்பாடு

2003 யூன் 02 ஆந் திகதி பீஈடீ 12 ஆம் இலக்க நல்லாளுகை தொடர்பான பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 8.3.5(அ) ஆம் பிரிவின் பிரகாரம் அரச கூட்டுத்தாபனமொன்றில் ஒதுக்கப்பட்ட அடிப்படையில் வாகனங்களை பயன்படுத்தல் தலைவருக்கும், பணிப்பாளர் நாயகத்திற்கும், நிறைவேற்றுப் பணிப்பாளருக்கும் மாத்திரம் மட்டுப்படுத்தப்பட்டிருந்த போதிலும், அதற்கு முரணாக சபையின் பணிப்பாளர் பதவிகள் வகிக்கும் உத்தியோகத்தர்களுக்கு வீட்டிற்கும் கடமை நிலையத்திற்கும் செல்வதற்கும் மற்றும் தனிப்பட்ட பிரயாணங்களுக்காகவும் உத்தியோகபூர்வ வாகனங்கள் வழங்கப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டில் எரிபொருளுக்காக ரூபா 3,192,029 தொகை செலவிடப்பட்டிருந்தது.

## 5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 5.1 உள்ளகக் கணக்காய்வு

2009 யூன் 09 ஆம் திகதிய டீஎம்ஏ/2009/(1) ஆம் இலக்க முகாமைத்துவ கணக்காய்வுச் சுற்றறிக்கையின் 7 மற்றும் 9 ஆம் பிரிவின் படி, உள்ளகக் கணக்காய்வு நிகழ்ச்சித்திட்டங்களும் கணக்காய்வுத் திட்டமும் தயாரிக்கப்பட்டிராததுடன் கணக்காய்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவது நலிவுற்ற நிலையில் இருந்தது. எவ்வாறாயினும், மீளாய்வாண்டின் போது 6 கணக்காய்வு ஐயவினாக்கள் வழங்கப்பட்டிருந்த போதிலும் அவ் ஐயவினாக்களில் குறிப்பிடப்பட்டிருந்த குறைபாடுகள் தொடர்பாகவும் சபையின் கவனத்தைச் செலுத்தி சீராக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 5.2 தீர்க்கப்பட்டிராத கணக்காய்வுப் பந்திகள்

முன்னைய கணக்காய்வு அறிக்கையில் காண்பிக்கப்பட்ட எனினும், போதிய கவனத்தைச் செலுத்தியிராத கணக்காய்வுப் பந்திகள் பின்வருமாறாகும்.

| 2013 ஆம் ஆண்டின் கணக்காய்வுப் பந்தியுடனான தொடர்பு | கணக்காய்வுப் பந்தியின் சுருக்கம் |
|---|---|
| (அ) போதிய அதிகாரத்தினால் உறுதிப்படுத்தப்படாத கொடுக்கல் வாங்கல்கள் | (i) வாடகைக் காலம் நீடிக்கப்படவோ அல்லது புதிய உடன்படிக்கை ஏற்படுத்தப்படாது 2013 ஆகஸ்ட் 01 ஆம் திகதி முதல் 2013 திசெம்பர் 31 வரை வாடகையாக ரூபா 841,000 தொகை செலுத்தப்பட்டிருந்தது. |
| | (ii) ஜாதிக சவிய நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் கொழும்பு மாவட்டச் செயலகத்திற்குச் செலுத்தப்பட வேண்டியதாகக் காண்பிக்கப்பட்டிருந்த ரூபா 1,009,740 தொகை அந்த அலுவலகத்திலிருந்து உறுதிப்படுத்தலொன்று இல்லாமலும் முறையான அங்கீகாரம் இன்றியும் வருமானத்திற்கு செலவு வைக்கப்பட்டிருந்தது. |

(ஆ) சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணக்கமின்மை

| | |
|---|---|
| (i) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக் கோவையின் XXIV ஆம் அத்தியாயத்தின் 3.5 ஆம் பிரிவு | மோட்டார் சைக்கிள் கடன் மற்றும் இடர் கடன் வழங்கப்படுகையில் மாதாந்தக் கழிப்பனவுகளின் கூட்டுத்தொகையின் எல்லை மாதாந்தச் சம்பளத்தின் 50 சதவீதமாகக் கருதப்பட்டு வழங்கப்பட்டிருந்தது. |
| (ii) 2010 திசெம்பர் 07 ஆந் திகதிய 150 ஆம் இலக்க தேசிய பாதீட்டுச் சுற்றறிக்கை | நிதிக் குத்தகைக் கொள்வனவு முறைமையின் கீழ் பெற்றுக்கொள்ளாமல் 05 ஆண்டுகளுக்காக வாடகை அடிப்படையில் 04 வாகனங்களுக்காக 2013 திசெம்பர் 31 வரை ரூபா 10,051,179 தொகை வாடகையாக செலுத்தப்பட்டிருந்தது. |
| (iii) 1994 யூன் 14 ஆம் திகதிய 95 ஆம் இலக்க பொது முயற்சிகள் திணைக்களச் சுற்றறிக்கையின் 02 ஆம் பிரிவு | சபையின் பிரதிப் பணிப்பாளர்களுக்கு மாதாந்தம் ரூபா 5,500 தொகையும் ஏனைய ஊழியர்களுக்கு நாளாந்தம் ரூபா 164 தொகையான எல்லைக்கு உட்பட்டு 2013 ஆம் ஆண்டில் செலுத்தப்பட்டிருந்த மொத்த போக்குவரத்துப் படிகள் ரூபா 5,004,963 ஆக இருந்தது. |

| | |
|---|---|
| (இ) முகாமைத்துவ செயற்திறனின்மை | இந்தியாவின் சென்னை நகரில் 2004 – 2009 ஆம் காலப்பகுதியின் போது சபையால் நடாத்தப்பட்டு வந்த இலங்கை வர்த்தக நிலையத்தின் 5 விற்பனை நிலையங்களிலிருந்து அறவிடப்பட வேண்டியிருந்த நிலுவை வாடகை மற்றும் மின்சாரக் கட்டணமான ரூபா 7,049,858 தொகை 2014 யூன் 30 வரையிலும் அறவிடப்பட்டிருக்கவில்லை. |

2012 ஆம் ஆண்டின் கணக்காய்வுப் பந்தியுடனான தொடர்பு

---

(ஈ) போதிய அதிகாரத்தினால் உறுதிப்படுத்தப்படாத கொடுக்கல் வாங்கல்கள்

1979 இன் 40 ஆம் இலக்க இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபை அதிகாரச்சட்டத்திற்கு முரணாக நியமிக்கப்பட்டிருந்த நிறைவேற்றுப் பணிப்பாளருக்கு 2012 திசெம்பர் 31 ஆம் திகதி வரை மாதாந்தப் படிப்பணம், எரிபொருள் படிப்பணம் மற்றும் தொலைபேசி கட்டணமாக ரூபா 1,557,337 கூட்டுத்தொகை சபை நிதியத்திலிருந்து செலுத்தப்பட்டிருந்தது.

(உ) இனங்காணப்பட்ட நட்டங்கள்

''அம்பாந்தோட்டை படஅத'' கைத்தொழில் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் தோற்பொருள் கைத்தொழில் செயற்திட்டத்திற்காக ரூபா 1,000,000 முதலீடு செய்யப்பட்டு ஸ்தாபிக்கப்பட்ட தனியார் கம்பனியின் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படுவது கைவிடப்பட்டிருந்தமையால் முதலீடு செய்யப்பட்ட தொகையை சபைக்கு அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை.

## 6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகளிலும் கட்டுப்பாடுகளிலுமான குறைபாடுகள் அவ்வப்போது சபைத் தலைவரது கவனத்திற்கு கொண்டுவரப்பட்டன. கீழே குறிப்பிடப்பட்ட கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பாக விசேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) முதலீடு
(இ) கடனை மீள அறவிடுதல்
(ஈ) நிலுவை வருமானம்
(உ) சொத்துக் கட்டுப்பாடு
(ஊ) வர்த்தகக் கண்காட்சி
(எ) பாதீடு

ஒப்பம்: டபிள்யூ.பீ.சீ.விக்ரமரத்ன
கணக்காய்வாளர் தலைமை அதிபதி (பதில்)